Registered as a News Paper in Ceylon

விலை: சதம் 15

யானை மார்க்
அஸ்பெஸ்டஸ்
கூரைத் தகடுகள்
அன்டன்
முள்ளுக் கம்பிகள்
கட்டுப்பாட்டுவிலைக்கு
விற்பனை செய்யும்
ஒரே ஒரு ஸ்தாபனம்!
ஸ்டீல்சன்ஸ்
287, 289, ஸ்ரான்லி றேட்-யாழ்ப்பாணம்.
போன்: 7035

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்

மலர் 13 மாசி 16 முஹறம் 2 (28—2—71) ஞாயிற்றுக்கிழமை இதழ் 19

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பரமேஸ்வராக் கல்லூரியில் நிறுவுவதற்கு ஆலோசனை

## செனட்டில் அமைச்சர் குமாரசூரியர் தகவல்

கொழும்பு, சனி

பரமேஸ்வராக் கல்லூரியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நிறுவப்படலாம். தமிழர் சிங்களவர் ஒற்றுமையை வளர்த்து மைத்திரிபாலாக்களையும் இரத்தினநாயக்காக்களையும் உருவாக்குவதோடு தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டிக்காக்கக்கூடியதாக இப்பல்கலைக்கழகம் அமையும் என நேற்று செனட்சபையில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும் பல்கலைக்கழகம் சம்பந்தமாக பல்வேறுவகையான செய்திகள் நிலவுவது பற்றி செனட்டர் எஸ். நடராசா எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் செல்லையா குமாரசூரியர் பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இராமநாதன் கல்லூரியில் நிறுவப்படலாம் எனச் செய்திகள் முன்பு வெளியாகி இருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எவ்விடத்தில் நிறுவப்படும் என்பது பற்றி அமைச்சர் குமாரசூரியர் மேலும் விளக்குகையில் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும் பல்கலைக்கழகத்திற்கு "இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்" எனப் பெயரிடப்படும். இப்பல்கலைக்கழகம் பரமேஸ்வராக் கல்லூரியில் நிறுவப்படலாம். வடமத்திய மாகாணத்தில் வாழும் சிங்கள மாணவர்களும் கல்வி கற்கக்கூடிய இது வசதிகளைக் கொண்டு விளங்கும். மைத்திரிபாலாக்களையும் இரட்னநாயக்காக்களையும் இப்பல்கலைக்கழகத்தில் உருவாக்கக் கூடியதாக அமையும். எனவே இப்பல்கலைக்கழகம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கக் கூடியதாக இருக்கும்.

பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவுவது பற்றி மிக உயர்ந்த மட்டத்தில் கலந்தாலோசித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அரசியல் பிரச்சினைகளை இதற்குள் கொண்டுவந்து குழப்பக்கூடாது. மாணவர் நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிறுவவேண்டும். பல்கலைக்கழகம் மாணவர்களுக்கேயன்றி அரசியல்வாதிகளுக்கல்ல என்றார்."

தமிழ் சஞ்சிகைகள் இறக்குமதி பற்றிய இன்னொரு கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில் மொஹிதீன் அறிக்கையைத் தாம் அமுல் நடத்துவதாகவும், இது இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவுமெனத் தெரிவித்தார். எமது முயற்சியைத் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் ஆதரித்து அறிக்கை விடுத்துள்ளனர். புதிதாக 30 புதிய வெளியீடுகள் வெளிவந்துள்ளன. காலிப் பகுதியிலிருந்து தமிழ்ப் பத்திரிகை ஒன்று இப்போது வெளிவரத் தொடங்கியுள்ளது. இவையெல்லாம் சஞ்சிகை தடை பற்றி நடவடிக்கை எடுத்த பின்னர் ஏற்பட்ட வளர்ச்சியாகும் என மேலும் தெரிவித்தார்.

சென்னையில்

## 27-ந் திகதி தொடக்கம் பிரசாரத்துக்குத் தடை

சென்னை, பெப். 27

சென்னையில் இன்று தொடக்கம் தேர்தல் சம்பந்தமான பிரசாரக் கூட்டங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினமே பிரசாரக் கூட்டங்களுக்கான கடைசித் தினமாயிருந்தது. நேற்று மட்டும் சென்னையில் 150க்கு மேற்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தேர்தல் வாக்கெடுப்பு ஆரம்பமாகவுள்ளதால் பிரசாரக் கூட்டங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

நாளையிலிருந்து

## புதிய பொது நிதிஉதவித் திட்டம் அமுலுக்கு வரும்

கோட்டை, சனி

புதிய பொது நிதிஉதவித் திட்டம் ஒன்று அமுலுக்கு வரவிருக்கிறது. வருகிற மார்ச் மாதம் 1-ம் திகதியிலிருந்து இவ்வுதவித் திட்டம் அமுலுக்கு வரவிருக்கிறது இத்திட்டத்தை சமூகசேவை அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கூன் தயாரித்துள்ளார்.

இத்திட்டத்துக் கென்று ஆண்டுக்கு 190 லட்சம் ரூபா செலவிடப்படும் எனவும் ஒருவருக்கு ஆகக்கூடியது மாதம் 50 ரூபா அளிக்கப்படும் என்றும் முன்பு 20 ரூபாவே ஒரு வருக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வந்ததுஎன்றும் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் குடிசைக் கைத்தொழிலுக்காக ஆகக் கூடியது ஒருவர் ரூபா 500 வரை பெறலாம். இந்த விதமான பண உதவியை அந்தப் பகுதியின் அரசாங்க அதிபரின் சிபாரிசின் பேரிலேயே பெற முடியும் என்று அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

## இ. போ. ச. நஷ்டத்திற்கு இவர்களே காரணமாம்

கோட்டை, சனி

நேர்மையற்ற கண்டக்டர்களும் பொறுப்பற்ற பிரயாணிகளும் இ. போ. ச. நிகர வருமானத்தில் 25 சதவிகிதத்தை மோசடி செய்கிறார்களாம்.

இத்திடுக்கிடும் தகவலை இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. அனில் முனசிங்கா வெளியிட்டுள்ளார். இந்த நஷ்டத்தில் 15 சதவிகிதத்தை கண்டக்டர்கள் கையாடுகிறார்கள் என்றும் மீதி 10 சதவீத நஷ்டம் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்யும் பிரயாணிகளால் ஏற்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். இந்நஷ்டத்தை நிறுத்த முடியுமானால் சபைக்கு ஏற்பட்டு வரும் பெரும்பகுதி நஷ்டம் தவிர்க்கப்படலாம் என அவர் தெரிவித்தார்.

## பொன்னாலையில் கைகலப்பு

### பலர் ஆஸ்பத்திரியில்

சுழிபுரம், சனி

பொன்னாலை கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில் வாழும் இரு சமூகத்தினருக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் பலர் காயமடைந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கத்திவெட்டு, வீடு தீக்கிரை போன்ற சம்பவங்களும் இடம்பெற்றதாகத் தெரிகிறது.

சங்கானைப் பொலிசார் சம்பவம் நடைபெற்ற பகுதியைக் கண்காணித்து வருகின்றனர்.

## நன்றி நவிலல்

திரு. ஏ. ஈ. தம்பர் அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்த சமயத்தில் ஆற்றொணாத்துயரத்தில் மூழ்கியிருந்த அன்னாரது குடும்பத்தின் துயரில் பங்குபற்றி, மலர்வளையங்கள் சமர்ப்பித்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், ஈமக்கிரியைகளில் நேரில்பங்குகொண்டும் ஆறுதல் கூறிய உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் திருமதி மேபல்தம்பர் (மனைவி), திருமதி மனோன்மணி கந்தசாமி (மகள்), திரு. கந்தசாமி (மருமகன்), திரு. எச். ஆர். ரி. தம்பர் (சகோதரன்) ஆகியோர் தங்களின் உளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றனர். தனித்தனியாக நன்றி தெரிவிப்பதற்கு முடியாமைக்காக அவர்கள்வருத்தம் தெரிவிக்கின்றனர். 95 பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2796

## மிதிபலகைப் பிரயாணம் தடை

கொழும்பு, சனி

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் திங்கட்கிழமையிலிருந்து மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்வது தடை செய்ய சபை முடிவு செய்துள்ளது. காலி வீதி, கொழும்பு - நீர்கொழும்பு வீதி ஆகியவற்றில் போக்குவரத்துக்கு விடப்படும் பஸ்களில் திங்கட்கிழமையிலிருந்து மிதிபலகையில் பிரயாணம் செய்வது தடை செய்யப்படும். போக்குவரத்துக்குத் தேவையான பஸ்கள் வாங்கும் வரையில் மற்றப் பகுதிகளில் மிதிபலகைப் பிரயாணம் அனுமதிக்கப்படும்.

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா

நடித்த

**எங்கிருந்தோ வந்தாள்**

இப்பொழுது நடைபெறுகிறது

மனோகரா—யாழ்ப்பாணம்

தினசரி 2-30 6-30, 9-30.
போயா தினங்களில்
நாலு காட்சிகள்

★ காந்தாராவ்
★ தேவிகா
★ பாலையா
★ லலிதா

முதலியோர் நடித்த



**சுகுண சுந்தரி**

**யாழ். வின்ஸர்**

தினசரி 4 காட்சிகள்

நடிகர் திலகமும் நாட்டியப் பேரொளியும்
சேர்ந்து நடிக்கும் வண்ணக் காவியம்

ஜெமினியின்

**விளையாட்டுப்பிள்ளை**

(ஜெமினி கலர்)

மற்றும் நடிகர்கள்

காஞ்சனா, சோ, மனோரமா, பாலையா.

6-வது வாரம்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்

கெப்பிடல்
(கொழும்பு)
பிளாஸா
(கொழும்பு)

சிவாஜி
காஞ்சனா
எம். என்.
நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த





**சிவந்த மண்**



## தேவை

கொழும்பில் உள்ள எங்கள் ஸ்தாபனத்திற்கு நல்ல அனுபவமும் கைத்தொழில் நுட்பக் கல்லூரியில் மூன்று வருட பயிற்சியும் பெற்ற லேத்மேன் (Latheman) தேவை. விண்ணப்பிக்கவும்.

ஜபர்ஜி பிறதர்ஸ்
இல. 6, ஸ்ரான்லிரோட்
யாழ்ப்பாணம். 2784


## கீரிமலையில்

கீரிமலை, சனி

கீரிமலை சிறுப்பர் மடத்தில் சிவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. சிவராத்திரி புராண படனமும், சிவசிந்தனை உபந்நியாசமும் அளவெட்டி பிரம்மஸ்ரீ சி. சோமசுந்தரக் குருக்களால் நிகழ்த்தப்பட்டது.

— —

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-35 அதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரை இசை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

844 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு — ஜி. சி. ஈ ஆங்கிலம் தமிழ் மூலம் சிங்களம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர் விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-30 பெண்ணுலகம், 7-00 ஞானமஞ்சரி, 7-15 சித்திரம் 7-45 வீணை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைப் பயிற்சி. 10-30 செய்தித் தொகுப்பு.


**நாகம்ஸ் சினிமா**

சுன்னாகம்

தினசரி 6-30 9-30
போயா நாட்கள் 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த

**திருமால் பெருமை**

இன்று மட்டும்

**ராஜா** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்-பிஎஸ்சரோஜா
நடித்த

**ஜெனோவா**

**ஸ்ரீ காலிங்கன்**

இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெமினி—பத்மினி
நடித்த

**எதிர்காலம்**

**வெல்லி சினிமா**

மாவிட்டபுரம்
தினசரி 2-30, 6-30, 9-30
ஏ. வி. எம் ராஜன்-சாரதா
நடித்த

**துலாபாரம்**

(தமிழ்)

REGAL Jaffna
Daily 4-45, 7& 9-45 p. m
Poya days 4 shows
Lee Marvin
in
THE KILLERS
(Color)


## பிஸ்கால் விற்பனை

பிஸ்கால் இல: 76/70
இலக்கம் 1993
பிரதி பிஸ்கால் கந்தோர்
வவுனியா.
21-2-1971

அருணாசலம் கைம்பெண் செல்லம்மா.

வவுனியா மாவட்ட நீதி மன்றத்தில் சங்கானை மேற்கு, யாழ்ப்பாணம்.

வழக்காளி

விரோதமாக

1. எஸ். ஆறுமுகம் கைம்பெண் தனகப்பிள்ளை.
2. வயிரமுத்து வயித்திலிங்கம் இருவரும் குருக்கள் புதுக்குளம், வவுனியா.

எதிராளிகள்

இதன் கீழ் காணப்படும் ஆதனங்களில் மேற்சொல்லிய வழக்கில்

எதிராளிகளுக்கு உடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1971ம் ஆண்டு மார்ச்சு மாதம் 22-ந் திகதி திங்கட்கிழமை முறையே காலை 10 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் காணிகளில் பிரசித்த வெந்தியில் விற்கப்படுமென்று இத்தாலறிவிக்கப்படுகிறது. ஆதாவது:

### ஆதனங்களின் விபரம்

**1-வது காணி**

வடமாகாணம் வவுனியா மாவட்டம், சின்னச்செட்டிகுளம் மேற்கு குருக்கள் புதுக்குளத்தில் உள்ள ''கூனாவடித்தறை'' என்னும் ரூபா 1300/- பெறுமதியான ஆதனம். இதன் விசாலம் ஒரு ஏக்கர், ஒரு றூட், எட்டு பேட்சஸ் (ஏ. 1, றூ 1, பே. 08) இதன் எல்லைகள்:-

கிழக்கு: ஆர் ஏ. சீ. றவுல்வ்ஸின் ஆதனம்.
வடக்கு: நாகப்பர் கணபதிப்பிள்ளையின் ஆதனம்.
மேற்கு: ஆறுமுகம் கைம்பெண் தங்கப்பிள்ளையின் ஆதனம்.
தெற்கு: ஆர். ஏ. சீ. றவுல்வ்ஸின் ஆதனம்- வவுனியா சீ 17/170ல் வவுனியாவில் பதியப் பட்டது

**2—வது காணி**

வடமாகாணம் வவுனியா மாவட்டம் சின்னச்செட்டிகுளம் மேற்கு குருக்கள் புதுக்குளத்தில் உள்ள ''ஆயிலிடிக்கமம்'' என்னும் ரூபா 2500/- பெறுமதியான ஆதனம் ஐந்தரைப் புசல் நெல் விதைக்கும் தறை. இதன் எல்லைகள் கிழக்கும் தெற்கும் முடிக்குரிய காணி ஆர் ஏ. சீ. றவுல்வ்ஸிக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. வடக்கு ஈடு வைத்தவர்களின் ஆதனம் மேற்கு ஆறுமுகம் கைம்பெண் தங்கப்பிள்ளையின் ஆதனம் - வவுனியா சீ 17/124ல் வவுனியாவில் பதியப்பட்டுள்ளது.

### அறவிடப்படும் தொகை

கொமிசன் தொகை ரூபா 1500/-.

வட்டி: 10-6-63 தொடக்கம் 30-1-64 வரை ரூபா 750/-க்கு 18 வீத வட்டி. அதன்பின் அறவிடும்வரை முழுத்தொகைக்கும் 5 வீத வட்டி.

பிஸ்கால் கட்டணமும் பவுண்டேஜ்ஜும் அறவிடப் படும்.

ஆ. குணநாயகம்,
மேலதிக பிரதி பிஸ்கால்,
வவுனியா
2794

## வடமராட்சி ஆ. ச. போட்டிகள்

பருத்தித்துறை, சனி

வடமராட்சி ஆசிரியர் சங்கம் நடாத்தும் பேச்சுப் போட்டி இசைப் போட்டி என்பன மார்ச் 4-ம் திகதி வடமராட்சி இந்து ம. ளிர் கல்லூரி மண்டபத்தில் நடக்கவிருக்கின்றன.

## வரி விளம்பரம்


### தேவை

அனுபவமுள்ள டிஸ்பென்ஸர் உடன் தேவை நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். டாக்டர் எஸ். ஏ. வெற்றிவேலு, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். 2857

### விற்பனைக்கு

காணி:

மாவிட்டபுரம் இறை, ஐந்தனை 3 பரப்பு நிலக்காணி பனையுடனும், அளவெட்டி வடக்கு புதிஞப்பிட்டி ஏழு பரப்பு, தோட்டம் செய்யும் பள்ள வயல் காணி பரப்பு 750 ரூபாய். விபரம்: வையாபுரி வீடு, பிள்ளையார் கோயிலடி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை 2861

நல்லூர் வடக்கில் ஒன்பது பரப்புக்காணி முழுவதும் இருபத்தேழாயிரம் துண்டுகளாகவும் வாங்கலாம்' உருமையாளரின் விலாசம். (தரகரல்ல) 92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. 2846


## நிர்வாகிகள்

அரியாலை, சனி

ஆனைக்கோட்டை, உயரப் புலம் உத்துங்க விநாயகர் ஆலய சைவசமய பரிபாலன சபை நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

தலைவர்: திரு சி. வடிவேற்பிள்ளை, செயலாளர் திரு வே சுப்பிரமணியப், தனாதிகாரி திரு. க. தம்பிப் பிள்ளை. ஐ துபேர் கொண்ட நிர்வாககுழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

0 0 0

சுழிபுரம், சனி

தொல்புரம் சனசமூக நிலைய புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் மு. நடராசா, உபதலைவர் சி இராதாகிருஷ்ணன், செயலாளர்: சண். கந்தையா, உபசெயலாளர்: செ. சுந்தசாமி, தனாதிகாரி: சொ. கோவிந்தன். விளையாட்டுக்காரியதரிசி: தா. இரத்தினவேல். நால்வர் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## வேறுபாடுகள் நீங்ககலை உதவுகிறது

சங்கானை, சனி

இளைஞர்களின் பொழுதுபோக்கு, வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய அம்சமாக அமைய வேண்டும். கலை வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு முக்கியமாக அமைவதால் நாட்டில் நிலவும் வேறுபாடுகள் நீங்குவதற்கு வழி வகுக்கும். இதற்கு இளைஞர்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றல் வேண்டும் என்று சங்கானை நிகரை வாலிப மன்றத்தின் 16-வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. அல்பிரட் செனவிரத்ன பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு சி. செல்லத்துரை தலைமையில் விழா நடைபெற்றது

பட்டின சபைத் தலைவர் திரு. சி. வயிரமுத்து விழாவை ஆரம்பித்துவைத்தார், ஆசிரியர் நா. நடராசா, மன்றச்செயலாளர் மா. பரமசிவம், மன்றத் தலைவர் சி. சுந்தரலிங்கம் ஏ. ஈ. இரத்தினசாமி ஆகியோரும் பேசினர்.

'விஞசி புத்திரன்' நீதிக்கோர் வல்லவன்' 'மயான காண்டம்'' பாசத்தின் பரிசு' 'ஏழை சிந்திய கண்ணீர்' 'இரத்த முத்திரை' ஆகிய நாடகங்களும் இடம்பெற்றன.

# கைவிட்ட இடங்களைமீட்பதற்கு தெ.வியட்னுமியர் தீவிரமுயற்சி

## கம்யூனிஸ்ட் வலுத்தாக்குதல் தொடர்கிறது

வாஷிங்டன், பெப். 27

தெற்கு லாவோஸில் ஆறு தினங்களுக்கு முன் இழந்துவிட்ட நிலைகளை மீண்டும் கைப்பற்றுவதற்கு தென்வியட்னும் படைகள் பெரும் பிரயத்தனம் செய்துகொண்டிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. இதே சமயம், வடவியட்னும் படைகள் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் தமது வலுத்தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

மலை உச்சிநிலையொன்றை தென்வியட்னும் படைகள் மீண்டும் கைப்பற்றுவதற்காக மூர்க்கமானமுயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இழந்துவிட்ட நிலைகளை அடைய அமெரிக்க ஆகாயப்படையின் ஆதரவுடன் தென்வியட்னமியர் செய்துவரும் முயற்சிகள் இன்னமும் வெற்றியளிக்க வில்லையாம்.

இருதரப்பிலும் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்கர் இரண்டு பென்டம் ஜெட் விமானங்களை இழந்து விட்டதாகக் கூறப்படுகின்றது. இதற்கிடையில் லாவோஸில் சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானங்களிலிருந்த வீரர்களை மீட்டு வருவதற்காக அமெரிக்க சிறிய அளவிலான தரைப்படையொன்றையும் லாவோசுக்குள் அனுப்பக்கூடும் என்று செய்தி வெளியாகியுள்ளது.

கம்போடியாவிலும் கடுமையான சண்டை நடைபெற்று வருவதாக தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. சண்டையை நிறுத்துவதற்கும் பாரிஸ் அமைதிப் பேச்சுக்களால் பயன் ஏற்படுவதற்கும் வடவியட்னும்மீது அமெரிக்காவும் தென்வியட்னுமும் படையெடுக்க வேண்டும் என்று கம்போடிய அமைச்சர் யோசனை கூறியிருக்கிறார்.

### காரியாதிகாரி பிரிவுக்கு கோரிக்கை

அம்பன், சனி

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள குடத்தனைக் கரையூர், அம்பன் நாகர் கோவில், செம்பியன் பற்று, மருதங்கேணி கிராம சேவையாளர் பிரிவுகளையும் பச்சிலைப்பள்ளி வடக்கில் உள்ள முள்ளியான், சுண்டிக்குளம் கிராமசேவையாளர் பிரிவுகளையும் ஒன்றுசேர்த்து கிழைக்கரையோரக் காரியாதிகாரி பிரிவு ஒன்றை அமைத்துத்தரும்படி கேட்கும் மகஜரை கிழைக்கரையோர அபிவிருத்தி முன்னணி உள்நாட்டுஅமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளது.

### திறந்து கிடக்கும் தபாற்பெட்டி

அம்பன், சனி

துன்னாலை தெற்கு குடவத்தையென்ற இடத்திலிருக்கும் தபாற் பெட்டி சில காலமாக திறந்த நிலையிலேயே கிடக்கின்றது.

இத்தபாற் பெட்டியின் பூட்டு பழுதடைந்தமையினால்தான் தபாற்பெட்டி திறந்துவிடப்பட்ட நிலையில் கிடக்கின்றதாகத் தெரிய வருகின்றது இதுசம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இன்னமும் திருத்தப்படாதிருப்பதால் அப்பகுதிமக்கள் தபால்களை அனுப்பச் சிரமப்படுகின்றனர்.

### சுழிபுரத்தில் 4 அபிவிருத்தித் திட்டங்கள்

சுழிபுரம், சனி

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி பிரிவிலுள்ள சுழிபுரம் கிராமசபை பகுதியில் நான்கு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து நடாத்த அபிவிருத்தி சபை முடிவு செய்துள்ளது.

பொன்னாலையில் தும்புத் தொழிற்சாலையும் தொல்புரத்தில் குடிசை கைத்தொழில் அபிவிருத்தி வேலையும், சுழிபுரம் பகுதியில் பீடி புகையிலைச் செய்கையும் பாற்பண்ணை அபிவிருத்தித்திட்டமும் செயற்படுத்துவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. சுழிபுரம் கிராமசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு வலிமேற்கு காரியாதிகாரி திரு. கே. நடராசா தலைமை வகித்தார். கிராமசேவையாளர்கள், கிராமசபை, கிராம முன்னேற்றச்சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் அபிவிருத்திசபையின் நோக்கங்கள்பற்றிக் காரியாதிகாரி விளக்கிக் கூறினர். தலைவராக காரியாதிகாரியும் உபதலைவராக சுழிபு[illegible] கிராமசபைத் தலைவர் தி[illegible] சு. கந்தசாமியும் தெரிவு செய்யப்பட்டனர்.

### இந்து சமுத்திரப்பாதுகாப்பு

## ஆய்வுக் குழுவிலிருந்து சாம்பியாவும் வாபஸ்

அடிஸ்அபாபா, பெப். 27

தென் ஆபிரிக்காவுக்கு ராணுவ ஹெலிகொப்டர் விமானங்களை விற்பதற்கு பிரிட்டன் செய்திருக்கும் முடிவை எதியோப்பிய மன்னர் ஹெய்லிசெலாஸி வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

அடிஸ் அபாபாவில் ஆரம்பமான ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமை ஸ்தாபனத்தின் கூட்டத்துக்குத் தலைமை வகித்து மன்னர் பேசினார்.

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் வழங்க பிரிட்டன் கடமைப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதை அவர் மறுத்தார். எந்த ஒரு கடமைப் பொறுப்பும் பிரிட்டனுக்குரிய தார்மீகக்கடமைப் பொறுப்பை மீறுவதாக இருக்கமுடியாது என்று மன்னர் ஹெய்லிசெலாஸி கூறினார்.

தென்னாபிரிக்காவுக்கு ஹெலிகொப்டர் விமானங்களை விற்பனை செய்ய பிரிட்டன் முடிவுசெய்திருப்பதால் அந்நாட்டின்மீது பொருளாதாரத்தடைவிதிப்பதற்கு நைஜீரியா ஆலோசித்துவருகின்றது.

இதேசமயம் இந்துசமுத்திரப் பாதுகாப்பு பற்றி ஆராய்வதற்கென சிங்கப்பூரில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் நியமிக்கப்பட்ட எட்டுநாடுகள்குழுவிலிருந்து சாம்பியாவும் விலகிக்கொள்ளமுடிவு செய்திருக்கின்றது ஏற்கனவே நைஜீரியா இந்தக்குழுவிலிருந்து விலகிக்கொண்டுவிட்டது.

ஹெலிகொப்டர்களை விற்பதற்கு பிரிட்டன் முடிவெடுத்து விட்டபின்னர் இந்தக்குழுவினால் யாதுபயனும் இல்லையென்று சாம்பியா தெரிவித்துள்ளது.

### பெண் பாம்புக்கடி நிபுணர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொட்டடி பாம்புக்கடி வைத்தியர் திரு. க. சிற்றம்பலத்தின் மனைவி திருமதி சத்திபாலதேவி சிற்றம்பலம் பாம்புக்கடி வைத்தியப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

சரவணையைப்பிறப்பிடமாகக்கொண்ட திருமதிசிற்றம்பலம் சித்தவைத்தியப்பிரிவில் பாம்புக்கடி வைத்திய நிபுணராக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

### பிரிவுபசாரம்

சுழிபுரம், சனி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற காரைநகரைச் சேர்ந்த எம். ஏ. கந்தையாவின் சேவையைப் பாராட்டி ஒரு பிரிவுபசாரவிழா கல்லூரி மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் நடத்தப்பட்டது. அதிபர் திரு எஸ். சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரிவுபசார மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

### பண்டிதர் புகார்

வேலணை, சனி

இலங்கைச்சுயபாஷா புள்ளிவிபரத் திரட்டுக்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே வெளியிடப்பட்டிருப்பதுபற்றியும் தமிழ் புறக்கணிக்கப் பட்டிருப்பது பற்றியும் பிரதான சுங்க சேகரிப்பாளருடன் ஊர்காவற்றுறைத் தொகுதி எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் தொடர்பு கொண்டுள்ளார். தமிழிலும் புள்ளிவிபரத்திரட்டை வெளியிட நடவடிக்கை எடுக்கும்படி அவர் தமதுகடிதத்தில் கேட்டுள்ளார்.

திரு இரத்தினம் எம் பி பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் பொலிஸ் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் உள்ள பதிப்புக்களே தமக்குஅனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவித்து தமிழில் வெளியிடப்படவில்லையா எனவும் வெளியிடப்படாதிருப்பின் வெளியிட நடவடிக்கைஎடுக்கும்படியும்கேட்டுள்ளார்.

### புதிய மசோதா

## இன உறவை விருத்தி செய்யுமாம்

### பிரி. மந்திரி சொல்கிறார்

லண்டன், பெப். 27

பிரிட்டனின் புதிய குடியேற்ற மசோதா இன உறவை விருத்தி செய்வதையே இலட்சியமாகக் கொண்டிருப்பதாக பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் திரு. ரெஜினல்ட் மோல்டிங் தெரிவித்தார். கடந்த 24ந் திகதி வெளியிடப்பட்ட இப்புதிய மசோதாபற்றி அவர் விபரிக்கையில் அரசாங்கத்தின் இன உறவுக் கொள்கையின் தேவைகளை எதிர்நோக்க குடியேற்றச்சட்டங்கள் மாற்றியமைக்கப்படவேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தினர்.

'பல்வேறு கலாச்சார, சமூக பின்னணிகளைக் கொண்ட பெருந்தொகையான குடியேற்றவாசிகளை எவ்வித சங்கடமுமின்றி சொற்பகாலத்தில் இந்நாடு அங்கீகரித்து ஒருமகத்தான சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இனிமேல் பரந்த அளவிலான நிரந்தரக் குடியேற்றம் இருக்காதெனபிரிட்டிஷ் மக்களுக்கு அவர் உறுதியளித்தார். 'இந்தமசோதா ஏற்கனவே பிரிட்டனில்நிரந்தரமாகக் குடியேறிய மக்களின் வாழ்க்கையை எவ்விதத்திலும் பாதிக்காது இவர்கள் இங்கு தொடர்ந்து வசித்து, தொழிலாற்றி, தங்களில் தங்கியிருப்போரையும், புரிந்து கொண்டு வரமுடியும் இதனை தெளிவாக விளங்கிக் கொள்வது அவசியம். ஏனென்றால் இதற்குமாருக பல்வேறு வகையான வதந்திகள் பரவிவருகின்றன' என்றார் அவர்.

### சாம்ராஜ்யப் பிரஜைகள்:

'பிரிட்டிஷ் பிரஜைகளாகவுள்ள சாம்ராஜ்ய குடிமக்களின் அந்தஸ்தில் எவ்விதமான மாற்றமும் ஏற்படுவதற்கில்லை. தற்போதுள்ள சகல உரிமைகளையும் அதாவது வாக்களிப்பது, தேர்தலில் போட்டியிடுவது போன்ற அரசியல் உரிமைகளையும் அவர்கள் கொண்டிருப்பார்கள்.

'கன்சர்வேடிவ் கட்சியில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று இப்புதியமசோதா சகல வெளிநாட்டுக் குடியேற்றம்மீது ஒருமுகப்பட்ட கட்டுப்பாட்டு முறையை விதிக்கிறது. வருகையாளர்கள், மாணவர்கள், உல்லாசப்பிரயாணிகள் இம்மசோதாமூலம் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள்' என்று அமைச்சர் மேலும் கூறினார்.

### சமூகத்துக்குப் பயன்படும்

மாவிட்டபுரம், சனி

'மாணவர்கள் சாரணியத்தை பொழுதுபோக்காகக் கருதாது வருங்கால சமுதாய வாழ்க்கைக்கு உகந்ததாகப் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் நல்ல சமுதாயம் ஒன்றை வருங்காலத்தில் உருவாக்கலாம்.

இவ்வாறு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நடந்த சாரணர் இயக்கத் தலைவர் பேடன்பவல்நினைவு விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கல்லூரியின் அதிபர் எஸ். மகாதேவன் கூறினர்.

கல்லூரி மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் முன்னாள்அதிபர் தெ. து. ஜெயரத்தினம் பேசுகையில், இந்த சாரணப்படையில் சேர்ந்து நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வடமாகாண சாரணர் இயக்க உதவி ஆணையாளர் திரு. எஸ். தேவகடாட்சம், ஆசிரியர் செ. கதிரேசம்பிள்ளை ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

### வடிசாராயம் வைத்திருந்தவருக்கு அபராதம்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் வாசியான கதிர்காமு சோமசுந்தரம் என்பவர் 2 கலன் 40 ரும் வடிசாராயம் வைத்திருந்ததாக முல்லைத்தீவு கலால் பரிசோதகர் திரு. ஏ. எல். ஏ. இராஜபக்சவினால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. விமல் விக்கிரமசூரியா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி எதிரிக்கு ரூபா 175 அபராதம் விதித்தார் அபராதம் கட்டத் தவறினால் 6 கிழமை சிறைவாசம் செய்யவேண்டுமெனக் கூறிநீதிபதி தீர்ப்பளித்தார்.

### அபிவிருத்தி கூட்டம்

தாவடி, சனி

உடுவில் கிராமசபை மண்டபத்தில், வலிவடக்கு காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக் தலைமையில் கிராமாபிவிருத்திச் சபையொன்று அமைப்பதற்கான கூட்டம் நடைபெற்றது.

சுருட்டுக் கைத்தொழில் அபிவிருத்தி, கால்நடை அபிவிருத்தி, கோழி வளர்ப்பு, சவ்வரிசிச் செய்கை என்பனவும், மின்சார சிறு உபகரண அபிவிருத்தி என்பனவற்றையும் விருத்திசெய்ய வேண்டும் என்னும் நிறைமானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

**மணிவாக்கு**

நான் நம்பியிருப்பது கடவுளை மட்டுந்தான். நான் மனிதரை நம்பும் காரணமாவது எனக்கு கடவுளிடம் நம்பிக்கையிருப்பதே. — மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 16ந் திகதி ( 28 - 2 - 71 )

## கட்சியைவிட நாடு பெரிது

'கட்சியை விட நாடே பெரிது' என்று இந்த நாட்டின் முதிர்ந்த அரசியல்வாதியென்றும் ராஜதந்திரி என்றும் பெயர்பெற்ற திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனதாமே பெரிது என்று... டைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில்தான் கட்சியைவிட நாடே பெரிது என்று கூறியிருக்கிறார். எங்கும் எதிலும் கட்சிதான் பெரிது என்ற மனப்பான்மை வளர்ந்துவரும் நமது நாட்டில் இப்படி ஒரு நல்ல கருத்தைத் துணிச்சலுடன் தெரிவித்த ஜே. ஆர். பாராட்டுக்குரியவர். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலரோ மற்றும் அரசியல்வாதிகள் பலரோ ஜே ஆரின் இக்கூற்றுப் பற்றி வேறுவிதமான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கக்கூடும். கூட்டணிக்கே வேட்டுவைக்கும் ஜே. ஆரின் ராஜதந்திரம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து உழைத்தும் கண்ட பயன் என்ன என்ற விரக்திமனப்பான்மையால் அதிலிருந்து வெளியேறுவதற்கு இது ஒரு ...ன்றும் திருமதி ... நாட்டின முதல் ...யாக வேண்டும் ...குரல் கொடுத்ததன் நோக்கமே பிரதமர் ஆசனத்தின் மீது அவர் ஆசை வைத்துவிட்டாரென்பதன் அர்த்தம் இப்போதுதான் புரிகிறதென்றும் பலரும் பலவிதமாகச் சொல்லலாம். நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா சமீபத்தில் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் கூறியதுபோல் வதந்திகளையும் வதந்திகளைப் பரப்புபவர்களையும் எவர்தான் எப்படித்தான் தடுக்க முடியும்.

ஆனாலும் கட்சியைவிட நாடே பெரிது என்ற ஞானோதயம் சில வருடங்களுக்கு முன்பே திரு ஜே. ஆர், ஜயவர்த்தனவுக்கோ மற்றும் இந்த நாட்டு அரசியல்வாதிகளுக்கோ ஏற்பட்டிருந்தால் நாடு இன்றைய பொருளாதார நெருக்கடிக்குள் அவல நிலைக்குள் உள்ளாகியிருக்க மாட்டாது.

இன்றைய கூட்டணி அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எதிர்ப்பதில் அர்த்தமில்லையென்றும் நாட்டுக்கு நன்மையான விஷயங்கள் அனைத்துக்கும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பளிக்கவேண்டுமென்றும் திரு. ஜே. ஆர் கூறியிருக்கிறார்' இது வரவேற்கத்தக்க பாராட்டுக்குரிய நல்ல மனப்பான்மை. இதே மனப்பான்மை ஆட்சிபீடத்தில் அமரும் வாய்ப்பைப் பெற்றுவந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் நடந்து வந்திருந்தால் நமது நாட்டில் மொழிப் பிரச்னை இந்த அளவுக்கு மோசமடைந்திருக்காது; தேசிய ஐக்கியமும் சீர்குலைந்து போயிருக்காது.

கட்சியைவிட நாட்டின் நலனும் நாட்டு மக்களின் நலனுமே பெரிதென்பதை யாரும் ஒப்புக்கொள்வர். நமது நாட்டுக்கு ஏற்பட்ட தீமைகளுக்கெல்லாம் மூல காரணம் கட்சி அரசியல்முறைதான் என்பதை நாம் பல தடவைகளிலும் இதே பத்திரிகையில் எடுத்துக்காட்டியிருக்கின்றோம். சகல அரசியல் கட்சிகளையும் கலைத்துவிட்டு ஆற்றலும் அனுபவமும், நேர்மையும் ஒழுக்கமும், தேசிய ஐக்கியத்தில் உறுதியும் உடையவர்களைக் கொண்ட தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டால் அதைவிட மகிழ்ச்சியளிக்கக்கூடிய விஷயம் இந்நாட்டு மக்களுக்கு இருக்கமுடியாது.

அரசாங்கத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் முன்னேற்றத்தைப் பொறுத்த விஷயங்களில் ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமென்ற விஷயத்தில் சிறுபான்மையினரை குறிப்பாகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் புதிதாக எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்நாட்டின் ஆட்சிபீடத்தில் அமரும் வாய்ப்பைப் பெற்றுள்ள பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த இருபெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அவைகளின் கூட்டணிகளும் தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கும் எந்த விஷயத்திலும் இதுவரை ஒத்துழைக்கவில்லையென்று சொல்ல முடியாது.

இனியாவது திரு. ஜே. ஆர். விரும்பும் ஒத்துழைப்பு கட்சி நலனை விட நாட்டின் நலனையே உண்மையில் பெரிதாகக் கருதக்கூடியதாக இருப்பின் நாடு நிச்சயம் முன்னேறும்.

தனி மனிதனை விட குடும்பம் பெரிது, குடும்பத்தைவிட சமூகம் பெரிது, சமூகத்தைவிட ஊர் பெரிது, ஊரை விட நாடு பெரிது, நாட்டை விட உலகம் பெரிது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

# கர்ம வீரர், தியாகி ராஜேந்திர பிரஸாத்

### இன்று சுதந்திர இந்தியாவின் முதல் ராஷ்டிரபதியான டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் நினைவு தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது

'ஊழியம், தியாகம் இரண்டையும் முன்னிட்டே சுதந்திர மார்க்கத்தில் செல்ல முடியும். அவ்விரண்டுமே உரைகல். வலிமை குன்றி, ஒற்றுமையின்றி, பிளவுபட்டு, சிதறுண்டு, மனவலியற்றுக் கிடப்பின் சுயராஜ்யம் கிட்டாது. கிட்டினும் அது கைநழுவாமல் காத்துக் கொள்ளமுடியாது. பரிசுத்தமாய், ஒற்றுமையாய், ஒழுங்காய், தீரமாய் இருப்பின், இந்தியாவுக்கு எதிராக இங்கிலாந்து என்ன செய்த போதிலும்சரி, நாம் சுயராஜ்யம் சித்தி எய்துவதைத் தடுத்துவிட முடியாது. நன்னெறியில் நின்று நம்மவர் நடந்து வருகையில் நம் தேசம் வெற்றி பெறுதல் திண்ணம்.'

பாபு ராஜேந்திரபிரஸாதின் இந்த வார்த்தைகள் தேச விடுதலைக்காகவோ அல்லது வேறெந்த உரிமைக்காகவோ போரிடும் ஓர் இனத்துக்கு எங்கும் எப்பொழுதும் வேதவாக்குகள் எனலாம். ஊழியம், தியாகம் இரண்டிற்கும் தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்த பெருமகன் அவர். சட்ட அறிவில் வல்லவர். அவர் வாழ்ந்த காலத்தில் அவரைப் போல வேறெவரும் இந்தியா முழுவதிலுமே இல்லை. நினைத்தால் மாதம் ஐயாயிரம் பத்தாயிரம் ஊதியம் பெற்றுக்கொண்டு நிம்மதியாக ராஜபோகத்தில் வாழ்ந்திருக்கலாம். தேச விடுதலைத் தொண்டுக்காக அதெல்லாவற்றையும் தள்ளிவைத்த மாதியாகி ராஜேந்திரர்.

அவர் எம். ஏ., எம். எல்: பட்டம் பெற்றவர். வங்காளம், பிஹார் மாகாணங்களில் நடந்த கல்லூரி பரீட்சைகள், சட்டப் பரீட்சைகள் பலவற்றில் எல்லோரையும்விட சிறந்த புள்ளிகள் பெற்று, முதல்வராக வந்து தங்கப்பதக்கங்களும் வெள்ளிப்பதக்கங்களும் பரிசாகப் பெற்றவர். உபகாரச் சம்பளங்கள் நிறையப் பெற்றவர். விஞ்ஞான சாஸ்திரங்களில் உலகப் புகழ்பெற்ற ஜெகதீஷ் சந்திரபோஸ், பிரபல சந்திரரே முதலிய நிபுணர்களிடம் கல்வி கற்கும் பாக்கியம் பெற்றவர். சிறு வயதில் பள்ளிக்கூடங்களில் படிக்கும்போது ராஜேந்திரரின் அசாதாரணமான புத்தி வன்மையைக் கண்டு ஆசிரியர்கள் அவரை ஒரு வகுப்பு ஏற்றுவதற்குப் பதிலாக இரண்டு வகுப்பு ஏற்றிவிடுவார்களாம், அவரை (தந்தை இறந்தபின்பு) கண்காணித்துவந்த தமையனார் 'இப்படிச் செய்தால் அவனுக்குக் கர்வம் பிடித்துவிடும். ஆகையால் ஒருவகுப்புத்தான் ஏற்றுங்கள்' என்று ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டாராம்.

1934-ம் வருடம் பிஹார் மாகாணத்தில் கொடியதோர் பூகம்பம் நிகழ்ந்தது. ஆயிரமாயிரமாக மக்கள் மாண்டனர். இன்னும் ஆயிரக்கணக்கானோர் வீடு வாசலின்றித் தவித்தனர். பசியும் பிணியும் மாநிலம் முழுவதும் பற்றிக் கொண்டது. இந்தச் சமயத்தில் ராஜன் பாபு சிறையிலிருந்தார். மகாத்மா காந்தி 1930ல் உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கிய நாள்முதல் அவர் அடிக்கடி சிறை புகுவதும் வெளியேறுவதுமாக இருந்து வந்தார் இளமையிலேயே தொட்டுக் கொண்ட நோய்வும் காசமும் அவரை சிறையில் மிகவும் வாட்டின. இளைத்து துரும்பாகி விட்டார். இந்த வருத்தத்திலும் பார்க்க துயருறும் தமது பிஹார் மக்களுக்குதொண்டு செய்ய முடியவில்லையே என்ற வருத்தம் அதிகமாயிற்று. கடைசியில் விடுதலைக்கு இன்னும் ஒரு மாதம் இருக்கத்தக்கதாக வெள்ளையர் அரசாங்கம் அவரை வெளியில்விட்டது. வெளியே வந்த அடுத்த தினமே பூகம்ப கஷ்ட நிவாரண வேலைகளில் முழுமூச்சாக இறங்கிவிட்டார். பண உதவி செய்யும்படி தேசமெங்கும் வேண்டுகோள் விடுத்தார்'

'எனது சகாக்களில் சிறந்த ஓர் ஊழியர் ராஜேந்திர பிரஸாத். பிஹார் விஷயம் எப்படி அவருக்கு முக்கியமோ அப்படியே எனக்கும் முக்கியமானது.' என்று மகாத்மாகாந்தி அவருடைய வேண்டுகோளுக்கு ஆதரவு நல்கினார். தேசத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் கடல் கடந்து வெளிநாடுகளிலிருந்தும் பணம் வந்து குவிந்தது.

ஒன்பது மாதங்களுக்குள் ராஜேந்திரபிரஸாத் பிஹார் பூகம்ப கஷ்டநிவாரணத்துக்காக முப்பது லட்சம் ரூபா சேர்த்தார்.

1934-ம் ஆண்டு அக்டோபர் மாதம் பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாசபை ராஜேந்திரபிரஸாதை ஏகமனதாகத் தலைவராக்கியது. அவருடைய தியாக ஊழியத்தின் சிறப்பை மக்கள் மதித்துவிட்டார்கள் என்பதற்கு இதைவிட வேறென்ன கௌரவம் வேண்டும்.

'காந்தியின் வலக்கரம் போலுள்ளவர்கள் மூவர். ஒருவர் நேருஜி, மற்றவர் ராஜாஜி. மூன்றுமவர் பிரஸாத்ஜி' என்று ஒரு தடவை பிரபல ஆங்கில ஆசிரியரும் அரசியல் அறிஞருமான ஜோன் கன்தர் என்பவர் எழுதினார்.

பாரத சுதந்திரக் கப்பலை வழிநடத்தி அதைக் கரையேறச் செய்த மகானுபாவர்களில் ராஜன் பாபுவும் ஒருவர். பிரிட்டிஷார் நாட்டைக் கைவிடும் தறுவாயில் இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. அதில் ராஜேந்திரருக்கு உணவு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இந்தியா பரிபூரண சுதந்திரம்பெற்ற பின்பு அதன் வருங்கால அரசியலை நிர்ணயித்த அரசியல் நிர்ணயசபையில்ராஜன் பாபுவே அதன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இத்தகைய சிறப்புகளோடும் தேசத் தொண்டு செய்த ஒரு மகானுக்கு கடைசிப் பரிசாகவும் அவருடைய தியாகத்தின் மகுடமாகவும் தேசத்தின் மிகவும் உயர்ந்த பதவி அளிக்கப்பட்டது.

இந்திய சுதந்திரக் குடியரசின் முதலாவது ஜனாதிபதி -டாக்டர் ராஜேந்திர பிரஸாத்'

- வழிப்போக்கன்

## காங்கேசன்துறை - மூளாய் புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கைப் போக்குவரத்துச்சபை காங்கேசன்துறையில் இருந்து புதிய பஸ் சேவையொன்றை நாளை தொடக்கம் ஆரம்பிக்கவிருக்கிறது. கீரிமலை, இளவாலை, பண்டத்தரிப்பு, மாதகல், சித்தன்கேணி ஊடாக மூளாய் வரை இச்சேவை நடைபெறும். காங்கேசன்துறையிலிருந்து காலை எட்டு மணிக்கும் நண்பகல் பன்னிரண்டு மணிக்கும் மாலை ஐந்து மணிக்கும் சேவைகள் நடைபெறும்.

பொதுமக்களின் வேண்டுகோளைத் தொடர்ந்து காங்கேசன்துறை பட்டினசபை முன்னைநாள் தலைவர் திரு. ஜெயபாலசிங்கம் காங்கேசன்துறையிலிருந்து மூளாய் வரை ஒரு புதிய பஸ் சேவையை ஆரம்பித்து நடத்துமாறு பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தது தெரிந்ததே.

இப்புதிய சேவையினால் மயிலிட்டி, காங்கேசன்துறை, கீரிமலை மக்கள் எளிதாக மூளாய் ஆஸ்பத்திரி செல்லவும், மூளாய், சுழிபுரம், சித்தன்கேணி மக்கள் கீரிமலை, காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்கு விரைவாகச் செல்லவும் வழியேற்பட்டுள்ளது.

......

மலையாள

## மாத்ருபூமி 27-ம் திகதி இதழ் பறிமுதல்

சென்னை, பெப்.27

மலையாளத்திலிருந்து வெளியாகும் மாத்ருபூமி என்னும் பத்திரிகையின் இம்மாத 27-ம் திகதி பிரதியை பறிமுதல் செய்ய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

சேலத்தில் நடைபெற்ற மூடநம்பிக்கை ஒழிப்பு மகாநாட்டையொட்டி நடைபெற்ற இந்துக் கடவுளர் உருவப்பட ஆபாச ஊர்வல படங்களை மாத்ருபூமி பிரசுரித்தமையே பறிமுதல் செய்வதற்கு காரணமாகும்.

ஆபாசபடங்களைபறிமுதல் செய்ய வேண்டுமென்ற சட்டத்திற்கமையவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

......

## வேலையற்றோர் இளைஞர் கழகம்

அளவெட்டி, சனி

பருத்தித்துறை வேலையற்றோர் இளைஞர் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கமிட்டி உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் விபரம்: தலைவர்: திரு. இரா. கிருஷ்ணராஜா, காரியதரிசி திரு. மு பச்சைமால் முருகன், பொருளாளர்: திரு. ஆ. யோகலிங்கம்.

## தமிழ்நாடு அரசு மறுப்பு

சென்னை, பெப். 27

நகைச்சுவை நடிகர் 'சோ' தயாரித்துள்ள முகமது பின் துக்ளக் என்ற படத்தின் சில பகுதிகளை நீக்க தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாக வெளிவந்த செய்தியை தமிழ்நாடு அரசாங்கம் மறுத்துள்ளது.

## 'கலைக்குத் தடைகூடாது' கலைஞர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

"இந்தியாவிலிருந்து இசைக் கலைஞர்கள் இங்குவருவதும் இங்கிருந்து இந்தியாவுக்கு இசைக்கலைஞர்கள் செல்வதுமான கலாச்சாரப்பரிவர்த்தனை எந்தக்காரணம்கொண்டும் தடைப்படக்கூடாது."

இவ்வாறு யாழ். அண்ணாமலை இசைக்கலைமன்றம நுண்கலை விசாரணைக்குழுவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

சிலகாலமாகத்தான் இலங்கைக்கலைஞர்களை இந்தியாவில் கௌரவிக்க ஆரம்பித்திருக்கும் நல்ல சூழ்நிலையைப் பார்க்கும்பொழுது இப்பொழுதுதான் இலங்கையில் கலை சற்றுவளர்ச்சியடைவதாகத் தெரிவருகிறது. இந்த நல்ல நிலைமை உருவாகும் இக்கட்டத்தில் கலை கலாச்சாரத்துக்கோ அறிவுக்கோ தடைபோடும் நடவடிக்கைகள் ஏற்படக்கூடாது என்று விரும்புகிறோம்.



...மிக் லைற் ஸ்...
செய்த "கொன்றை...
பிரதியை தமிழ் ஆ...
திரு. க. கனகரா...

## வடப... பின்... என்கி...

கால...

'வடபகுதி ...
மக்களின் நலன்கருதி ...
சாலை நேரந்தவிர்ந்த ...
றைய நேரங்களி...
கடமை புரிகிறார்கள். ...
வழியை சிங்கள ஆ...
களும் பின்பற்ற வேண்...

இவ்வாறு உதவி ...
யமைச்சர் திரு. துட...
காலி மத்திய மகாவி...
லயத்திலின்று ம் ...
பெற்ற 3 ஆசிரியர்...
சேவைநலம் பாரா...
விழாவின்போது ...
யில் கூறினார்,

அவர் தொடர்ந்து ...
கையில் கூறியதாவது: ...
போதைய அரசாங்க...
நிதிநிலைமையில் ...
குறை ஆசிரியர்கள் பி...
களைத் தீர்ப்பதோ, ப...
லைத் தளபாடங்கள், ...
டங்களைப்பற்றிய நிலை...
தீர்ப்பதோ முடியாத...
மாகும்; ஆயினும் ...
பட்டதாரி ஆசிரிய...
நியமித்திருக்கின் ...
விரைவில் மேலும் ...
புதிய ஆசிரியர்கள் ...
னஞ் செய்யப்பட வு...
வார். ஆசிரியர் சுதந்திர...
விரும்புகின்றார்கள் இ...
எதிர் காலத்தில் நல்...
சமுதாயத்தை உரு...
முடியாத நிலையேற்ப...
ளது.

யாழ்ப்பாணம் இந்...
விர் பெற்றோர் ஆசிரிய...
கத்தினர் புதிய கட்...
ஒன்றை அமைக்கவுள்...
பாடசாலை வசதிக...

## 'கந்தபுராண வா... கொண்டாடு...

யாழ்ப்பாணம். ஞ...
நாளை தொடக்கம் ...
மாதம் 8-ம் திகதி ...
கந்தபுராண வாரத்...
இம்மாதம் 5-ம் திகதி ...
யப்பசிவாசாரியார் ...
நாளையும் கொண்...
மாறு நாவலர் பெரு...
கந்தபுராண சபைக் ...
தரிசியும் நாவலர் ...
பிரசார இய...
இயக்குநருமான வித்து...
க. கணபதிப்பிள்ளை ...
படி சபைகள் சார்பில் ...
சைவமதஸ்தாபனங்க...
கேட்டுள்ளார்,



...ற் ஸ்தாபனத்தாரின் 28-வது வெளியீடான ஔவையார் அருளிச் ...றை வேந்தன்'' நூல் வெளியீட்டு விழாவில் நூலின் முதற் ... அறிஞர் திரு. கி. வா. ஜெகந்நாதன் மேற்படி ஸ்தாபன அதிபர் ...னகராசாவிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

# ...பகுதி ஆசிரியர்களை ...ன்பற்ற வேண்டும்

## ...ன்கிறார் பதில் கல்வி அமைச்சர்

...காலி, சனி ...ஆசிரியர்கள் ...குதி பாட ...விர்ந்த மதி ...களிலும் ...ர்கள். இந்த ... ஆசிரியர் ... வேண்டும்', ...தவி கல்வி ... துடாவை ...வித்தியா ...ம் ஒய்வு ...சிரியர்களின் ...பாராட்டு ... பேசுகை

...ர்ந்து பேசு ...வது: தற் ...சாங்கத்தின் ... பற்றுக் ...கள் பிரச்னை ...ர, பாடசா ...கள், கட்டி ...ய நிலையைத் ...டியாதகாரிய ...லும் 2500 ...ஆசிரியர்களை ...ன் ரூ ம். ...லும் 3000 ...ர்கள் நியம ...படவுள்ள ...தந்திரத்தை ...கள் இதனுல் ... நல்ல ஒரு ... உருவாக்க ...யேற்பட்டுள்

... இந்து மக ...ஆசிரியர் சங் ...ய கட்டிடம் ...கவுள்ளனர். ...சதிக் கட்டணத்திலிருந்து 50,000 ரூபாவை மேற்படி கட்டிடத்திற்குச் செலவுசெய்ய முதன் முதலாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதே மாதிரி இப்பகுதி மக்களும் இப்படியான முன்னேற்றக் காரியங்களைச் செய்ய முன் வர வேண்டும்.

அரசியல் வாதிகளின் உதவியை ஆசிரியர்கள் நாடும் வரை இடமாற்ற விடயத்தில் அரசியல் தலையீடு இருந்து கொண்டேயிருக்கும்.'

## ...ன வாரம் ...டாடுக'

...ணம்- ஞாயிறு ...க்கம் இம் ... திகதிவரை ...ாரத்தையும் ... திகதி கச்சி ...ார் திரு ... கொண்டாடு ... பெருமான் ...பக் காரிய ...லர் சைவப் ... இயக்க ...வித்துவான் ...ள்ளை மேற் ...ார்பில் சகல ...ங்களையும் ...படுத்தும்.

# தீர்ப்பை எதிர்பார்த்து 10 ஆலயப் பிரவேச வழக்குகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதி ஆலயப் பிரவேசம் சம்பந்தமான 10 வழக்குகள் கோர்ட்டுகளில் விசாரணை முடிவடைந்து தீர்ப்புக்காகக் காத்திருக்கின்றன. வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று இத் தகவலைத் தெரிவித்தார்.

மாவிட்டபுரம் ஆலய தர்மகர்த்தாவான திரு. துரைசுவாமிக்குருக்களுக்கும் திரு ஸி சுந்தரலிங்கத்திற்கும் எதிராக அட்டர்ணி ஜெனரலினல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டபோது பொலிஸ் அதிபர் திரு சுந்தரலிங்கம் சாட்சியமளித்தார்

மாவட்ட நீதிபதி திரு. ஏ வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட இவ் வழக்கில் முடிக்குரியவழக்கறிஞர் திரு எல். டி குருசாமி மனுதார் சார்பிலும், அட்வகேட் திரு ஆர் ஆர் தங்கராசாவின் உதவியுடனும் புரக்டர் திரு ஏ உலகநாதனின் அனுசரணையுடன் திரு ஸி சுந்தரலிங்கம் எதிர் மனுதார் சார்பில் ஆஜராகிவாதாடினர்

திரு ஸி சுந்தரலிங்கத்தின் குறுக்குவிசாரணைக்குப் பொலிஸ் அதிபர் பதிலளிக்கையில பிரிவுக்கவுன்ஸிலில் ஒரு வழக்கும் சுப்ரீம்கோர்ட்டில் இரு வழக்குகளும் மல்லாகம் கோர்ட்டில் மூன்று வழக்குகளும் யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் 4 வழக்குகளும் தீர்ப்பை எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்தார். வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## வீதியின் நிலை

வல்வெட்டித்துறை, சனி

பருத்தித்துறை - தம்பசெட்டி வீதி மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதாக பொதுமக்கள் பலத்த புகார் தெரிவிக்கின்றனர்

வல்வெட்டித்துறை - காங்கேசன்துறை பிரதான வீதியிலும் மழை காலத்தில் மக்கள் நடமாட முடியாதிருப்பதாகக் குறை தெரிவிக்கப்படுகிறது.

......

## கூட்டுப்பிரார்த்தனை

வேலணை, சனி

வேலணை கிராம சீர்திருத்தச் சங்கம் நடத்தும் வெள்ளிக்கிழமைக் கூட்டுப் பிரார்த்தனைத் தொடரில் வேலணை கிழக்கு வைரவர் ஆலயத்தில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற கூட்டுப் பிரார்த்தனை திரு. கு. சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

......

## ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் முன்னணிக் கழகத்தின் 25-வது ஆண்டுவிழா வைகாசி மாதத்தில் நடைபெற விருக்கிறது.

மரதன் அஞ்சலோட்ட போட்டி, சைக்கிள் போட்டி என்பனவற்றுடன் கலை நிகழ்ச்சிகளை நடாத்தத் தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது,

# ஜெயாறன் எழுதுவது:

இம்முறையும் திருக்கேதீச்சரத்திலே சிவராத்திரியன்று என்மனதைப் பெரிதும் கவர்ந்தது தீர்த்தக்காவடிதான். அங்கு செல்லுவதில்லை என்றும் கொழும்பிலேயே தங்கி ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷனில் நடைபெறும் பூசையைத் தரிசிப்பதென்றும்தான் இருந்தேன். அந்த மடத்தில் மிக பக்தி சிரத்தையுடன் இரவெல்லாம் மிகப் புனிதமான சூழ்நிலையில் நான்கு காலப் பூசையும் நடைபெறுவதாக ஓர் அன்பர் கூறியிருந்தார்.

ஆனல் சற்றும் எதிர் பாராதமுறையிலே திருப்பெருந்துறையான திருக்கேதீச்சரத்திலிருந்து தந்தி மூலம் அவசர அழைப்புக் கிடைத்தது. கேதீச்சரநாதனே வருமாறு அழைக்கிறார் என்பதை உணர்ந்தேன். என்ருலும் ரயிலில் கூட்டம் தாங்காது. எப்படிச் செல்லுவது என்று திகைத்திருக்கையில், ஓர் அன்பர் தாமாக டெலிபோன்செய்தார் தாம் காரில் தனியே செல்வதாகவும் தம்முடன் வரமுடியுமா என்று அழைத்தார்! நாமாகத்திட்டம் போட்டால் அதற்குப் பல தடைகள் இருக்கலாம். ஆனல் எல்லாவற்றையுமே இறைவன் இஷ்டத்துக்கே விட்டுவிட்டு, முயற்சிஎதுவும்கூடச் செய்யாமல் இருப்பின் எல்லாம் சுலபமாக தடையின்றி நடப்பதை அனுபவத்தில் காணக்கூடும்.

வழியிலே எங்கும் சைவச் சாப்பாடு கிடைப்பது குதிரைக்கொம்பு. ''புனித நகரமான'' அனுராதபுரத்திலும் சுத்த உணவு கிடையாது. ஜீவஇம்சை செய்யப்படாதென்பதே புத்தர் பெருமானின் முதல் உபதேசம். அவரது சமயத்தைப் பாதுகாத்து வளர்ப்பதாகக் கூறுபவர்களில் இந்த முதல் உபதேசப்படி எவ்வளவுபேர் நடக்கிறார்கள்? மதுபானம் செய்வது பாவம் என்பது மற்றோர் கோட்பாடு. ஆனல் புனித நகரில் மதுபான வகைகள் தாராளமாகக் கிடைக்கின்றன! புனித நகர் என்று பிரகடனம் செய்துள்ளதன் கருத்தே விளங்கவில்லை!

நல்லவேளையாக அங்குள்ள முருகன்கோயில்தான் கடைசியாகத் தஞ்சமளித்தது. கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்ற முதுரையின் நோக்கம் சற்றே விளங்கிற்று. சமூகத் தேவைகளை கோயில்களே பெரிதும் ஈடுசெய்யமுடியும் காசு பணத்துக்காக இன்றி அன்புக்காகப் பணி செய்யக்கூடிய இடம் அது தான். ஒவ்வொரு ஊரிலும் தமிழ்மன்னர்கள் ஆட்சி செய்தகாலத்தில் கோயில்களும், அன்னசத்திரங்களும் மடங்களும் உண்டு. மன்னர்களின் உதவியால் அவை சரிவர நடந்து எளிய யாத்திரிகர்களுக்கும் வேண்டியனவற்றை அளித்துவந்தன. ஆனல் இக்காலத்திலோ ஏழைகள் யாத்திரை செய்வதைப்பற்றி நினைக்கவும் முடியுமா?

இலங்கையிலே பெரிய பெரிய ஹோட்டல்கள் கட்டுவதுதான் இப்போது அரசாங்கமும் ஊக்கமளிக்கும் ஒரு புதிய தொழில். ஆனல் அவை இங்கிருக்கும் நமக்கல்ல வெளிநாடுகளிலிருந்து வரும் பணக்காரர்களுக்குத்தான். அவர்களிடமுள்ள 'டாலர்களை' கறக்கத்தானேயன்றி அன்புக்காகவா? அல்லது விருந்தோம்பலா? எல்லாம் பணம் பணம். அன்புக்கு இடமேது?

அனுராதபுரம் முருகன் கோயிலில் வசதிகள் இல்லாவிடினும்சற்றே இளைப்பாறிக்கொள்ளவும், ரொட்டி பழம் இவற்றைச்சாப்பிட்டு சற்றே பசி தீர்த்துக்கொள்ளவும் முடிந்தது. அங்குள்ள குருக்கள் குடும்பத்தார் அன்புடன் ஏதோ முடிந்த உதவியைச் செய்தார்கள் அவர்கள் வாழ்க!

திருக்கேதீச்சரம் சேர்ந்ததும், அங்கு உணவுப் பிரச்னையே இல்லை. பல இடங்களிலும் அன்னதானம், காப்பிதானம், உப்புமா தானம் முதலியன இரவுபகலாக அமோகமாக நடந்தன. சிவராத்திரியன்று பட்டினி கிடந்து விரதமிருக்கவேண்டுமென்பார்கள். ஆனல் அன்றையதினம் அங்கு அன்னதானமெல்லாம் செய்கிறார்களே அது சரியா என்று எனக்கு ஒரு சந்தேகமேற்பட்டது. உணவு சாப்பிடவேண்டுமென்ற கட்டாயமெதுவுமில்லை. சிலர் சுத்த உபவாசமும் இருந்து விரதம் அனுஷ்டித்தனர். ஆனல் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழந்தை குட்டிகளுடன் வெகுதூரமான இடங்களிலிருந்தும் வருவதால், அவர்களில் தேவைப்பட்டவர்களுக்கு உணவளிக்க ஒழுங்கு செய்யவேண்டியதுதானென்றும், ஸ்ரீ ஈசான சிவாச்சாரி சுவாமிகள் யோசனை கூறியதன்மீதே, அன்னதானங்கள் பெருமளவில் நடைபெறுகின்றன. அப்படி நடப்பதால்தான், மக்களும் குடும்பம் குடும்பமாக ஆயிரக்கணக்கில் உணவுக்கவலையின்றி வருகின்றார்கள். வருடத்துக்கு வருடம் கூட்டமதிகம்.

அங்கு பாலாவியின் கரை மீது, அனலைதீவு அன்பரொருவர் பர்ணசாலையைக் கட்டி துறவு வாழ்க்கை வாழ்கின்றார். அது ஒரு குடிசைதான். ஆனல் அங்கு எவ்வளவு தூய்மை! எவ்வளவு அன்பு! என்னுடன் வந்த ஓர் அன்பர், அத்துறவிக்கு ஏதோ பணம் கொடுக்க முன்வந்ததும், அவர் வாங்க மறுத்துவிட்டார். தமக்குத்தேவைப் பட்டதை இறைவன்கொடுத்துள்ளதாகவும் தமக்குப் பென்ஷன் கிடைப்பதாயும் தெரிவித்து, போதுமென்ற மனத்தால் பொன் செய்கின்றார். அந்த ஆசிரமும், அவர் காட்டிய உண்மை அன்பும் அங்கு என்மனதைப் பெரிதும் கவர்ந்தது நமது திருப்பெருந்துறையாகிய திருக்கேதீச்சரத்தை நினைக்கையில், மற்ற இடங்களைவிட என்மனதை அந்த எளிய ஆசிரமம்தான் அதிகம் இழுக்கின்றது. உண்மை அன்பு எங்குள்ளதோ அங்குதானே நம்மனமும் செல்லும்.

சிவராத்திரி புராண நூல் வெளியீட்டுவிழா முதல் நாள் இரவில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்துப்பெரியார் எழுதிய அந்நூலை உரையுடன் பெரிய புத்தகமாக ஸ்ரீகாந்தா அச்சகத்தின் அதிபர் கணபதிப்பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ளது போற்றத்தக்கதாகும். தமிழகத்தில்கூட இவ்வித நூல் கிடையாது. சிவராத்திரியன்று இந்தப் புராணத்தைப் பல கோயில்களிலும், மடங்களிலும் படிப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். தமிழகத்திலிருந்து பண்டமாற்று ஏற்பாட்டின்மூலம் புத்தகங்களைத் தருவிக்கலாம் என்று ஒரு யோசனையைக்கேள்விப் பட்டேன். இங்கு வெளியான இவ்வித நல்ல நூல்களை தமிழகத்துக்கு அனுப்பி வைத்தால் அங்கு பெரிதும் பயன்படுவதுடன் ஈழத்தின் பெருமையும் புலமையும் தமிழகத்தில் விளங்கக்கூடும்.

இம்முறை தீர்த்தக்காவடி பகல் இரவு இருவேளையும் சுமார் 15 முறைக்குமேல் எடுக்கப்பட்டது. உலகில் எங்குமே காணக்கிடைக்காத காட்சி இது கைக்குழந்தையை ஒரு தாய் இடுப்பில்வைத்துக்கொண்டு தீர்த்தக்காவடியை அக்குழந்தையுடன் தலைமீது வைத்து, பாலாவியிலிருந்து ஈரப்புடைவையுடன் வந்து, கோயிலின் மேற்குப் பிரகாரத்திலுள்ள ''புண்பட்ட திருமேனியனுக்கு'' தானே பக்தியுடன் அபிஷேகம் செய்த காட்சி பார்த்தோர் மனதை உருக்கியது ஒவ்வொரு முறையும் சுமார் 400 அல்லது 500 பேர் தலைக்கு ஒவ்வொரு ரூபாய் செலுத்தி தீர்த்தக்காவடி எடுத்தனர். இந்தப்பணமெல்லாம் திருப்பணிக்குத்தான். இம்முறை இக்காட்சியை சினிமாப்படமும் எடுத்தது குறிப்பிடத்தக்கது பாடல்பெற்ற திருக்கேதீச்சர கோவில் வரலாற்றை மையமாகக் கொண்டு, ஒருமுழு நீள சினிமாப் படத்தை பக்திச்சூழ்நிலையில் பிடித்து ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் காட்டுவது பல விதங்களிலும் பயன்படுவதாக இருக்கும்.

மகாஜனசம்பத

## இன்று சீட்டிழுப்பு

கொழும்பு, ஞாயிறு

24-ம் இலக்க மகாஜன சம்பத சுவீப் இழுப்பு இன்று மாலை 5-15மணிக்கு புத்தளம் பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற விருக்கிறது. பரிசு பெறும் டிக்கட்டுகளுக்கு மார்ச் மாதம் 5-ந் திகதியும் 7-ந் திகதியும் தேசிய லொத்தர் சபை காரியாலயத்தில் பரிசுத் தொகை வழங்கப் படும்.

......

## 'வங்கியைத் திறக்குக'

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊர்காவற்றுறையில் திறக்கப்படவிருக்கும் இலங்கை வங்கிக்கிளையை இனியும் தாமதிக்காது திறந்துவைக்குமாறு தீவுப் பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இலங்கை வங்கி பொது முகாமையாளரிடம் கடித மூலம் கேட்டுள்ளார்

## ஆயசேவை நடத்த கி. ச. தீர்மானம்

ஊர்காவற்றுறை: சனி

ஊர்காவற்றுறை காரை நகர் ஆயசேவையை எடுத்து நடத்த அரசாங்கத்தின் அனுமதியைப் பெறுவதற்கு காரைநகர் தெற்குக் கிராமசபை தீர்மானித்துள்ளது

சபையின் முதல் மாதாந்தக் கூட்டத்தில் அரசினரைக் கேட்டுக் கொள்வதற்கான இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

......

## சிறுவர் சித்திரக் காட்சி

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளின் சிறுவர் சித்திரக் காட்சி மார்ச் 5-ம் 6-ம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. யாழ் மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி திரு. அ. சந்திரசேகரம்பிள்ளை 5-ம் திகதி காலை இக்காட்சியை ஆரம்பித்து வைப்பார். சித்திர வித்தியாதிகாரி திரு ஆ. தம்பித்துரை இதற்கான ஒழுங்குகளைமேற்கொண்டுள்ளார்.

# இஸ்ரேல் போல் தமிழரும் தனிநாடு அமைக்க வேண்டுமாம்

ஊரதீவு, சனி

"இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தங்கள் சமயத்தையும் மொழியையும் காப்பாற்றவேண்டிய கால கட்டத்திலே இன்று இருக்கிறார்கள். இவைறைப்பாதுகாத்து தமிழினத்தின் பாரம்பரியத்தைநிலைநாட்ட வேண்டுமாயின் எமது பிரதேசத்தில் தமிழர் ஆட்சி நிலவவேண்டும். எமது ஆட்சியை இங்கு நிலைநாட்ட இன்றைய இளம் சந்ததியினர் முன்னின்று உழைக்காவிட்டால் ஈழத்தில் தமிழினம் வாழ்ந்ததா என்ற கேள்வி 25 ஆண்டுகளின் பின் நிச்சயம் எழத்தான் செய்யும். இந்த அவலநிலைக்கு ஈழத்தமிழினம் உள்ளாகாமல் தடுப்பதற்கு ஒவ்வொரு தமிழ் இளைஞனும் முன்வரவேண்டும். ஈழத்தமிழ் மக்களைப் போன்ற குடிசனத்தொகையையும் நிலப்பரப்பையுமுடைய இஸ்ரேல் மக்கள் தங்களுக்கென்ற ஒரு நாட்டை பாலஸ்தீன பாலைவனத்திலே நிறுவமுடியுமானால் ஏன் ஈழத்தமிழகத்தில் தமிழன்னையை அரியணை ஏற்றமுடியாது என்று ஒவ்வொரு இளைஞனும் தன் உள்ளத்திலே கேள்வி எழுப்பி நமக்கென்ற ஒரு நாட்டை நிறுவ உழைக்க வேண்டும்."

தீவுப்பகுதி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினரும் தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவருமான திரு வ நவரத்தினம் ஊரதீவுஇளந்தமிழர் மன்றத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

மன்றக் காப்பாளர் திரு . பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அன்று ஆங்கிலேயர் காலத்தில் நாவலர் பெருமான் தோன்றி சைவத்தையும் தமிழையும்காத்தார். இன்று நடைபெறும் இந்த மத மாற்ற முயற்சியை தடை செய்வதற்கு ஒவ்வொரு தமிழ் இளைஞனும் நாவலரின் மனோதிடத்துடன்சந்து பொந்துகளிலிருந்தெல்லாம் புறப்பட்டுதமிழையும் சைவத்தையும் எமது பிரதேசத்தையும் ஒருங்கே காப்பாற்ற வேண்டும்,

புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆசிரியர் செ, இலகுப்பிள்ளை, கவிஞர் நல்லையூரன் செல்வன் க. ஸ்ரீஸ்கந்தராசா செல்வன் ஜ. குலேந்திரன் உட்பட மற்றும்பலர் உரையாற்றினர், மன்றச் சிறப்பு மலரான இளந்தமிழன் இதழை திரு. கா. கந்தசாமி வெளியிட்டு வைத்தார். முதற் பிரதியை புங்குடுதீவு கிராம சபை உறுப்பினர் செ. சோமசுந்தரம் பெற்றார். காங்கேசன்துறை எம் பி திரு சா வே ஜே செல்வநாயகம்' அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தலைவர் அட்வக்கேட் திரு செ கோடீஸ்வரன், தமிழர் சுயாட்சிக் கழகப் பொதுச்செயலாளர் திரு க சிவானந்தசுந்தரம் ஆகியோர் அனுப்பிய வாழ்த்துச் செய்திகளும் விழாவில் வாசிக்கப்பட்டன.

## சிற்றூழியரை நியமிக்குக

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். அரசாங்க செயலக விசாரணைப்பகுதியில் குமாஸ்தா ஒருவரை நியமித்துள்ளதை அரசாங்க பொதுத் தொழிலாளர் சங்க யாழ். கிளை ஆட்சேப மகஜரை சங்க இணைச் செயலாளர் திரு. எம். ஆறுமுகம் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவிடம் சமர்ப்பித்துள்ளார்.

யாழ். செயலக விசாரணைப் பகுதியில் இப்போது மதியுரைக் குழுவைச்சேர்ந்த உத்தியோகஸ்தர் ஒருவரே கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

சிற்றூழியர் ஒருவரால் செய்யக்கூடிய இவ்வேலையை உயர் சம்பளம்பெறும் குமாஸ்தா ஒருவர் செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுவதாக மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் முன்னர்போல் சிற்றூழியர் ஒருவரையே இந்த இடத்திற்கு நியமிக்குமாறும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. (கு வி ம)

## ஜேர்மன்-இலங்கை வர்த்தக உடன்படிக்கை

கோட்டை, சனி

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும், இலங்கைக்கும் இடையிலான வர்த்தகப் பேச்சுவார்த்தை இன்று கொழும்பில் ஆரம்பமாகியது. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசைச் சேர்ந்த தூதுக் குழு ஒன்று இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நேற்று கொழும்பு வந்து சேர்ந்தது.

ஒரு வார காலம்வரை நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தை 1971-1975ம் ஆண்டு வரைக்குமான வர்த்தக உடன்படிக்கை வகைச் சாத்திடப்படும் மார்ச் 5ந் திகதி ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் இலங்கை வரவிருப்பதாகவும் தெரிகிறது.

## கச்சேரியில் கடமையாற்றினர்

கொழும்பு, சனி

பொதுநிர்வாக, உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும், அவரது அமைச்சைச் சேர்ந்த திரு நீல் டீ அல்விஸ் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் நேற்று கொழும்புக் கச்சேரியில் கடமையாற்றினார்கள்.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள பிரச்னைகளை ஆராயும்பொருட்டே இவர்கள் நேற்றுக் கொழும்புக் கச்சேரியில் கடமையாற்றினார்கள். அமைச்சரும், சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் அடுத்த வாரம் மீண்டும் அங்கு கடமையாற்றி மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பார்கள்

## கலைஞர் இடமாற்றம்

பருத்தித்துறை, சனி

ஹாட்லிக்கல்லூரி ஆசிரியை செல்வி எஸ். நவரத்தினசிங்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார். புலோலி இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. கே. சிவபாதசுந்தரம் அச்சுவேலிகிறிஸ்தவக்கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## வைக்கோல் நிலையம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடமாகாணத்தில் வைக்கோலைச் சேமித்து வைப்பதற்கு நிலையமொன்றை அமைக்கும்படி கோரி மகஜர் ஒன்றை ஊரியான் பயிர்ச்செய்கைக்குழு யாழ் கமத்தொழில் இலாகாவுக்கு அனுப்பியுள்ளது.

அம்மகஜரில்தற்போதைய நிலையில் வைக்கோல் முக்கியமாக கடதாசி செய்வதற்கும் பயன்படுவதோடு கால் நடைகளுக்கும் அத்தியாவசியமான உணவாயிருக்கின்றதென்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு வி ம)

## வெற்றிதோல்வி இல்லை

மாவிட்டபுரம். வெள்ளி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் யூனியன் கல்லூரியும் மோதிய சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிந்தது.

மேற்படி கல்லூரிகளின் சரித்திரத்தில்முதல் தடவையாக கிரிக்கெட் போட்டியில் இக் கல்லூரிகள் மகாஜனா மைதானத்தில் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது

இதையடுத்து ஆடிய மகாஜனக் கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது.

2-ம் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 3 விக்கட் நஷ்டத்துக்கு 51 ஓட்டங்களைப் பெற்றபோது மழை காரணமாகப் போட்டி நிறுத்தப்பட்டு வெற்றிதோல்வியின்றி முடிவடைவதாக அறிவிக்கப் பட்டது.

## கல்முனை வெற்றி

சாய்ந்தமருது, வெள்ளி

கல்முனை சன்டேற் யூத் உதைபந்தாட்டக் கழகத்துக்கும் கல்முனை குவான்டஸ் உதைபந்தாட்டக் கழகத்துக்குமிடையில் கல்முனை உஸ்லித் திடலில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 6—0 கோல்களால் சண்டோஸ் யூத் வெற்றி பெற்றது.

0 0 0

கல்முனை சாகிருக்கல்லூரி விடுதிமாணவர்கள் உதைபந்தாட்டக்கழகத்துடன், சாய்ந்தமருது மருள் உதைபந்தாட்டக் கழகம் மோதிய சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 3-1 கோல்களால் மருனை சகிரு தோற்கடித்தது.

## கட்டாய சேமிப்பு பணம் சம்பளத்திற் கழிவு

பருத்தித்துறை., சனி

இப்பகுதியிலுள்ள சகல பாடசாலை ஆசிரியர்களின் இம்மாதச் சம்பளத்திலிருந்தும், அவர்களின் சம்மதமின்றியே கட்டாய சேமிப்பு நிதிக்கெனப் பணம் கழிக்கப்பட்டுள்ளது. சில ஆசிரியர்களின் சம்பளத்தில் ஒருபகுதி இலங்கை வங்கியிலிருந்து பெற்ற கடனுக்காகக் கழிக்கப்படுகிறதாம்.

## சித்தி

சங்கானை, சனி

இலங்கை சாட்டெட் கணக்காய்வாளர்கள் நிறுவனத்தால் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடாத்தப்பட்ட சாட்டெட்கணக்காய்வாளர் இறுதிப்பரீட்சையில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திரு. சண்முகரத்தினம் முருகுப்பிள்ளை சித்தி எய்தியுள்ளார். இவர் கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவர்.

## கம்யூனிஸ்ட் நிர்வாகிகள்

சாய்ந்தமருது. சனி

இறக்காமம் கம்யூனிஸ்ட் கட்சிக்கிளையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் எம் ஐ எம் நஸீம் செயலாளர் ஏ எம் சகீத், உப-செயலாளர் ஐ எல் எம் ஏ பாவா, பொருளாளர் ஏ ஆர் ஐ சமட். நிர்வாக உறுப்பினர்கள் எம் கே முகமட், எ எல் எஸ் லெவ்வை, என் எல் உமரர்

# கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே கடந்த கிழமை நடைபெற்று முடிந்த கிரிக்கெட் போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:

### சமமான முடிவு

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக் கிரிக்கெட்கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஹாட்லி கல்லூரி முதல் இன்னிங்ஸில் 158 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 85 ஓட்டங்களையும் பெற்றது, சென். பற்றிக்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 113 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 4 விக்கெட் நஷ்டத்துக்கு 34 ஓட்டங்களையும் பெற்றது.

இப்போட்டி சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி 112 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### குருநாகல் வெற்றி

குருநாகல் மாலிகதேவா கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், யாழ். மத்திய கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மாலிகதேவா கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது. இக் கல்லூரியின் வீரர் காமினி பத்திரான சகல துறைகளிலும் சிறப்பாக விளையாடியது பாராட்டத்தக்கது.

இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே நி)

## சமயநெறி

யாழ்ப்பாணம், ஞாயிறு

"சமயநெறிநாட்டில எவ்வளவு தூரம் பரவுகின்றதோ அவ்வளவுக் ஒற்றுமை வளரும் சைவசமயம் பரந்த நோக்கத்துடன் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தத்துவத்திலமைந்தது" என இளிநொச்சி திருநெறிக்கழக அமைப்பாளர் திரு த நல்லதம்பி உருத்திரபுரம் சிவாலயத்தில் நடைபெற்ற மகாசிவராத்திரி விழாவில் பேசுகையில் கூறினார்.

புராண பாராயணமும் விசேட பூசை அன்னதானமும் நடைபெற்றன (கு வி ம)


## கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY

நீர்ப்பாசன பம்புகள்

- மணிக்கு 10,000 கலன்
- குறைந்த இயக்கச் செலவு
- பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல; 37/39, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. சி. ஜேசெப் (மனேஜர்)

தொலைபேசி: 7031

# தமிழ்நாடு தேர்தல்களம்

# சேலம் நகரத்தில் பூரண ஹர்த்தால்; ஆட்சேப ஊர்வலத்தில் 1 லட்சம் மக்கள்

## ஈ.வே.ரா.பெரியாரைகைதுசெய்யகோரிக்கை

## 'விடுதலை' பத்திரிகைக்கு தீ வைத்தனர்

[ நமது சேலம் நிருபர் ]

திராவிடக் கழகத்தினர் ஜனவரிமாதம் 24-ம் திகதி சேலத்தில் நடத்திய ஊர்வலத்தை ஆட்சேபித்து நேற்று சேலம் நகரம் முழுவதும் ஹர்த்தால், அனுஷ்டிக்கப்பட்டது. ஆஸ்திகர்கள் ஏற்பாடுசெய்த ஓர் ஆட்சேப ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

சகல கல்வி நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. மாணவர்களும், ஆசிரியர்களும், பாடசாலையை பகிஷ்கரித்தார்கள். நேற்று சேலத்தில் உள்ள எந்த சினிமாத் தியேட்டரிலும் படம் காண்பிக்கப்படவில்லை. சேலம் நகரமே அமைதியாகக் காணப்பட்டது. ஹோட்டல்கள், கடைகள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் கூட நடைபெறவில்லை. தேர்தல் ஊர்வலங்களும் நடைபெறவில்லை

வங்கிகள் திறக்கப்பட்டிருந்தபோதும், வழக்கத்திலும் பார்க்க 20 சத விதத்தினரே நேற்று வங்கிகளுடன் தொடர்புகொண்டனர் என வங்கி மனேஜர்கள் தெரிவித்தனர் தமிழ்நாடு இந்துசபையும், ராஜ்ய இந்து பிரசாத், தமிழ்நாடு இந்து பாதுகாப்பு சபை ஆகியவை ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி கூட்டாக கோரிக்கை விட்டிருந்தன. நகைக்கடை, மருந்துக்கடை ஊழியர்களும் ஹர்த்தாலில் கலந்துகொண்டனர். திராவிடக் கழகத் தலைவர் ஈ வே ராமசாமிபெரியாரின் உருவச் சிலைக்கருகில் பொலிசார் பாதுகாப்பாக நின்றார்கள். ஜீப்வண்டிகளில் பொலிசார் நேற்று முழுவதும் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

### பிரமாண்டமான ஊர்வலம்

நேற்று பிற்பகல் சேலத்தில் நடந்த பிரமாண்டமான ஊர்வலத்தில் சுமார் 1 லட்சம் பேர் கலந்துகொண்டார்கள். மாணவர்களும், பெண்களும் இந்த ஊர்வலத்தில் அதிகமாகக் காணப்பட்டனர்.

திராவிடக் கழகத்தினர் தெய்வப்படங்களில் செருப்பு மாலை சூட்டிச் சென்றதையும் மனதைப் புண்படுத்தும் வகையில் தெய்வப்படங்களையும் கடந்த ஜனவரிமாதம் 24-ம் திகதி சேலத்தில் ஊர்வலமாகக்கொண்டுசென்றதையும் ஆட்சேபித்தே நேற்றுசேலத்தில் இந்த ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் சென்ற பெண்கள் பக்திப் பாடல்கள் பாடிக்கொண்டு சென்றனர்சேலாப்பேட்டை மாரியம்மன் கோவிலில் நடந்த விசேஷ பூசையைத் தொடர்ந்து அங்கிருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது. ஊர்வலத்தின் முன்னால் யானை ஒன்றுசென்று கொண்டிருந்தது. ஊர்வலத்தின் பின்னால் இரு ரதங்களில் சுவாமி ஐயப்பரின் சிலை எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தில் நாதஸ்வர இசையும் இடம்பெற்றது. ஊர்வலம் கூட்ட மைதானத்தை அடைய சுமார் 5 மணித்தியாலங்கள் சென்றது. கூட்டமைதானத்தில் சுமார் 1 லட்சத்திற்கு கூடுதலான மக்கள் திரண்டிருந்தும் பஸ்களிலும் லொறிகளிலும் கார்களிலும் மக்கள் வந்திருந்தனர். சென்னையிலிருந்து 1000 பேர் கொண்ட மாணவர்கோஷ்டியொன்றும் வந்திருந்தது.

தமிழ்நாடு ஜனசங்க தலைவர் திரு. என். பி. வாசதேவன், சின்டிகேட் காங்கிரஸை சேர்ந்த திரு. ஆர். ரி. பார்த்தசாரதி, சீதாலட்சுமி இராமசாமி, திரு. கே. ஏ. சீனிவாச செட்டியார், தமிழ்நாடு இந்துசபை செயலாளர் திரு. எம். இராமசாமி ஆகியோர் கூட்டத்தில் பேசினார்கள். கூட்டம் நள்ளிரவுக்குப் பின்னரும் தொடர்ந்து நடைபெற்றது.

திராவிடக்கழகத் தலைவர் திரு ஈ. வே. இராமசாமி பெரியாரை கைதுசெய்யும்படி, தமிழ்நாடு அரசாங்கத்தை கோரும் தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. இந் நாட்டில் உள்ள கோடிக்கணக்கான இந்து மக்களின் மனதைப் புண்படுத்தும் விதத்தில் திராவிடக் கழகத்தினர் ஊர்வலம் நடத்தியதால் கழகத் தலைவரை கைது செய்ய வேண்டுமென பேச்சாளர்கள் வற்புறுத்திக் கூறினார்கள்.

திராவிட கழகத் தலைவர் ஈ. வே. ராமசாமி பெரியாரின் சிலைக்கு அருகில் அருவருத்த கருத்துக்களை வெளியிடும் 'விடுதலை' பத்திரிகையின் பிரதிகளை ஒரு கோஷ்டியினர் தீவைத்துக் கொளுத்தினார்கள்.

அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படாத விதத்தில் பொலிசார் கடமையாற்றினார்கள் சேலம் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. மற்றும் பகுதிகளிலிருந்தும் மேலதிகமாக பொலிசார்கள் சேலத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

### தஞ்சாவூரிலும் ஊர்வலம்

தஞ்சாவூரில் நேற்று அமைதியான ஊர்வலம் நடந்தது சேலம் சம்பவத்திற்கும் துக்ளக் பத்திரிகை பறிமுதலுக்கும் ஆட்சேபம் தெரிவித்து இந்த ஊர்வலத்தை நடத்தினார்கள் இந்த ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்

### கோயம்புத்தூரில் ஹர்த்தால்

கோயம்புத்தூரிலும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகளும் வியாபார நிலையங்களும் ஹோட்டல்களும் நேற்று முழுவதும் பூட்டப்பட்டிருந்தன. திராவிடக் கழகத்தினரால் சேலத்தில் இந்துக் கடவுள்கள் அவமரியாதை செய்யப்பட்டதை ஆட்சேபித்து இந்த ஹர்த்தால் நடைபெற்றது. தமிழ்நாடு கோவில் பாதுகாப்பு சபையினர் ஹர்த்தால் நடத்தும்படி வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

### வேலூரில் கடையடைப்பு

வேலூரிலும் நேற்று சேலம் சம்பவத்திற்கு ஆட்சேபம் தெரிவித்து கடைகள் பூட்டப்பட்டன நேற்று முன்தினம் ஒரு கோஷ்டியினர் கடைகளைப் பூட்டி ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி ஒவ்வொரு கடைக்கும் சென்று கோரினார்கள். மற்றொரு கோஷ்டியினர் கடைகளைப் பூட்ட வேண்ட மென்றும் கடைகளை திறந்து வைக்கும்படியும் பொலிஸ்பாதுகாப்பு அளிக்கப்படுமென்றும் ஒலிபெருக்கிமூலம் தெரிவித்தார்கள். திருவண்ணாமலை ஆர்காடு மற்றும்பல கிராமங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது!

### சென்னையிலும் ஹர்த்தால்

சேலம் சம்பவத்தை ஆட்சேபித்து நேற்று சென்னையிலும் சில பகுதிகளில்ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. விஸ்வ இந்து பரிசாத் இந்துக்கோயில் பாதுகாப்பு சபை ஆகியவை ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி வேண்டுகோள் விடுத்தன. பாதுகாப்பு நடவடிக்கையாக நேற்றுமுன்தினமிரவு சுமார் 200பேர் கைதுசெய்யப்பட்டனர்.

### சிலையை அகற்றுக

தெய்வங்களுக்கு எதிராக சுலோகங்களை தாங்கியிருக்கும் ஈ. வே. ராமசாமிப் பெரியாரின் சிலையை அகற்றும்படி தமிழ்நாடு அரசாங்கத்தைக்கோரும் தீர்மானமொன்று நேற்றுநடந்த கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் பலபகுதிகளில் நேற்று சேலம் சம்பவத்தை ஆட்சேபித்து ஹர்த்தாலும் ஆட்சேப ஊர்வலங்களும் நடைபெற்றன.

### எம்.ஜி. ஆர். பிரசாரம்

செங்கல்பட்டு மாவட்டத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றுமின்னல் வேகத்தில் தேர்தல் பிரசாரம்செய்தார் அவர் ஒவ்வொரு கிராமமாகச் சென்று முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவுதிரட்டினார், வெற்றிலை வியாபாரிகள் சார்பில் 41 ஒரு ரூபாய் நோட்டுமாலை எம். ஜி ஆருக்கு அணியப்பட்டது.

நேற்றுமுதல் அமைச்சர் கருணாநிதி அவர் போட்டியிடும் சைதாப்பேட்டை தொகுதியில் வீடுவீடாகச் சென்று வோட்டுக்கேட்டார் புகையிரத நிலைய வீதியிலிருந்து அவர் வோட்டுக் கேட்க ஆரம்பித்தார் பல இடங்களில் மலர் மாலைகளுக்குப்பதிலாக ரூபா நோட்டுமாலைகள் சூடப்பட்டது.

ஒரு இடத்தில் கருணாநிதி பேசும் போது கடந்த 15 நாட்களாக தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தேன். மக்கள் அளித்துள்ள ஆதரவு தி. மு. கழகம் மீண்டும் ஆட்சிக்கு வரும் என்பதை திட்டவட்டமாக தெரிந்துவிட்டதாகக் கூறினார்.

ஆயிரம் விளக்கு தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட எஸ் ஏ சாலியா, அதே தொகுதியில் தி மு கழக வேட்பாளராக போட்டியிடும் மதியழகனுக்கு ஆதரவு அளிப்பதாக கூறியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மதியழகனை ஆதரிக்கும்படி கோரியிருக்கிறார்.

திருவல்லிக்கேணி தொகுதியில் அமைச்சர் நெடுஞ்செழியன் நேற்று வீதி வீதியாகச் சென்று ஓட்டுக் கேட்டார் அந்தப் பகுதியில் உள்ள கடற்றொழிலாளர் நெடுஞ்செழியனுக்கு ஆதரவு தெரிவித்தனர். ஒவ்வொரு வீட்டிலும் தேர்தல் நிதி சேர்க்கப்பட்டு 1500 ரூபா நெடுஞ்செழியனிடம் வழங்கப்பட்டது.

### நடிகர்கள் பிரசாரம்

புரசைவாக்கம் தொகுதியில் நேற்று அன்பழகனுக்காக நடிகர் ரவிச்சந்திரன் பிரசாரம் செய்தார். இவருடன் நடிகர் ஓ ஏ கே தேவரும் சென்றார். சென்னை பெசன்ட் நகரில் நேற்றிரவு நடந்த பொதுக் கூட்டத்தில் முரசொலி மாறன் மா. பொ. சிவஞானம் ஆகியோரை ஆதரித்து நடிகை மாடிலட்சுமி நடிகை சந்திரகாந்தா ஆகியோர் பேசினார்கள்.

சென்னை சவேரா ஹோட்டலில் நேற்று நடந்த நடிகை ஜெயலலிதாவின் பிறந்த தின விழாவில் தனக்கு ஒட்டுப் போடும் வயது வந்து விட்டதென்றும் வாக்காளர் பட்டியலில் தனது பெயர் இல்லையென்றும், ஜெயலலிதா கூறினார்.

குமரி கோட்டம் தயாரித்த கே. சி. பிலிம்ஸின் புதுப்படத்தில் எம். ஜி ராமசந்திரனுடன் நடிக்க ஒப்பந்தமாகியிருப்பதாகவும் அவர் கூறினார்.

### எஸ் எஸ் ஆர் வில்லுப்பாட்டு

சென்னை 15-வது வட்டம் எல்லையம்மன் கோவிலருகே நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சி முடிந்து அவர் மேடையை விட்டு இறங்கும்போது அவர் மீது சோடா போத்தல் வீசப்பட்டது. சோடா போத்தல் வெடித்ததால் பலராமன் என்பவர் காயமடைந்தார்

### திருமணப் பரிசு

மார்ச் 11-ந் திகதிக்குப் பிறகும் தமிழ்நாட்டில் தி மு க. ஆட்சியே நீடிக்கும் என்று சென்னை பெரம்பூர் தொகுதியில் நடந்த கூட்டத்தில் முதலமைச்சர் கருணாநிதி கூறினார்: சென்னையில் நேற்று ஒரே மேடையில் 39 ஜோடிகளுக்கு சிக்கனத் திருமணம் நடைபெற்றது. இந்த விழாவில் முதல் அமைச்சர்கருணாநிதியும், நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும் கலந்து கொண்டனர். எம். ஜி. ஆர் ஒவ்வொரு ஜோடிக்கும் 250 ரூபா வீதம் 10,000 ரூபா பரிசளித்தார்.

திரு. கருணாநிதி பேசும் போது கூறியதாவது!

சுவரொட்டி போடத் தெரியாவிட்டால் எங்களிடம் கேட்டுக்கொண்டு போட்டிருக்கலாம். ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவேன் என்றீர்களே! போட்டீர்களா? என்று நடிகர் சிவாஜிகணேசன் என்னைக் கூண்டில் நிறுத்தி கேட்டது போல் கேலிச் சித்திரத்துடன் ஒரு சுவரொட்டியை ஒட்டியிருக்கிறார்கள். அவர் கேட்டதெல்லாம் சரிதான். இதே நடிகரை நான் கூண்டில் நிறுத்தி வசனமழை பொழியச் செய்தேனே. அதற்காக எனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும். இன்று 3 படி அரிசி கேட்கிறார்களே. அவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் 3 பிடி அரிசியாவது கொடுத்தார்களா? இன்று அரிசி தாராளமாக கிடைக்கிறது.

நேற்றுடன் தேர்தல் பிரசாரங்கள் முடிவடைந்தன.

## 250 மாணவருக்கு 2 ஆசிரியர்கள்

தெனிநுவர, சனி

இங்குள்ள கனிஷ்ட பாடசாலையில் 250 மாணவர்களுக்கு 2 ஆசிரியர்கள் மட்டுமே இருக்கின்றனர். இங்குள்ள சில ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

ரூபா 1000|-தொடக்கம்
ரூபா 5000|- வரை சேமிப்புக்கு
வருடம் 7 சத வீத வட்டி
கொடுக்கப்படும்
இச் சேமிப்பை 7 நாள் அறிவித்தலில்
எப்பொழுதும் எடுக்கலாம்.
தம்பி அன் கோ.,
284, காங்கேசன்துறை வீதி :: வண்ணார்பண்ணை,

## நாடு பூராவும் காலபோக அறுவடை

# நெல்கொள்வனவு இலாகாவில் 5000பேருக்கு வேலைவாய்ப்பு

## கிளிநொச்சியில் மட்டும் 10 லட்சம் புசல் நெல் கிடைக்கும்

(நமது நிருபர் குவிம)

யாழ்ப்பாணம், ஞாயிறு வயல்களில் காலபோக வேளாண்மையின் பொது விளைந்த நெல்லைக் கொள்வனவுசெய்வதில் நெல் கொள்வனவு இலாகா துரிதமாக ஈடுபட்டுள்ளது. இதற்கு முன்னோடியாக நாடு பூராவுமுள்ள பயிர்ச்செய்கைக்குழுக்கள் வயல்களுக்கு நேரடியாகச் சென்று விளைந்த நெல்லின் தொகையை மதிப்பிட்டு வருகிறது. நாடு பூராவுமுள்ள 80நெற்களஞ்சியங்களிலும் சுமார் 5000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசாங்கத்தின் புதிய திட்டத்தின்படி விவசாயிகள் தங்கள்வசமுள்ள நெல்லை அரசாங்க நெல்கொள்வனவு நிலையத்திடமே கையளிக்க வேண்டும். இத்திட்டத்தின்படி விவசாயிகளிடமிருந்து பெறக்கூடிய நெல்லின் தொகையை மதிப்பீடு செய்வதில் பயிர்ச்செய்கைக்குழு தற்போது ஈடுபட்டுள்ளது.

பயிர்ச்செய்கைக் குழுவின் மதிப்பீட்டின்படியே விவசாயிகள் நெல்லை விற்பனவு செய்யமுடியும். வடபகுதியில் கிளிநொச்சித்தொகுதியில் மட்டும் 10 லட்சம் புசல் நெல்லை மார்ச் முடிவுக்குள் கொள்வனவுசெய்ய முடியும் என கொள்வனவு இலாகா எதிர்பார்க்கிறது.

வயல்களிலிருந்தே நெல்லை நேரடியாகப் பெற்றுக்கொள்ளும்படியும், இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் சாக்குகள், கூலிகள் போன்ற செலவுகளைத் தவிர்த்துக் கொள்ள முடியுமென்றும் பல பயிர்செய்கைக்குழுக்கள் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளன. இதை நெல் கொள்வனவு இலாகா ஏற்றுக்கொண்டால், அரசாங்க வாகனங்கள் வயல்களுக்கு நேரடியாகச்சென்று கொள்வனவுசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5000 பேருக்கு வேலை வாய்ப்பு

நாடுபூராவும் 80 நெற்களஞ்சியங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு நெற்களஞ்சியத்திலும் தலா 50,000 புசல் நெல் சேமிக்கமுடியும் என்றும் விவசாய இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 1 கோடி 60 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த 80 களஞ்சியங்களிலும் சுமார் 5000 பேருக்கு தற்காலிக வேலை வசதிகிடைக்கும் என்றும் கூறப்பட்டது. நாடுபூராவும் நெல்கொள்வனவு துரிதமாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## கடற் படையினரால் மீனவருக்கு தொல்லையாம்

யாழ்ப்பாணம், சனி மயிலிட்டியிலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் தொழிலாளர்கள் கடற்படையினரால் பயமுறுத்தப்படுவதோடு அவர்களது உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறதாம்.

கடந்த சில நாட்களாக கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு கடலில் ரோந்து சுற்றி வரும் கடற்படைப் படகுகள் மீன்பிடிப்படகுகள் மீது மோதியுள்ளனவாம். இது பற்றிய புகார்கள் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்று திரும்புகையில் கடற்படைப் படகுகளில் வெளிச்சம் போடும் வசதிகள் இருந்தும் அவற்றைப் பயன் படுத்தாமல் கடல் தொழில் படகுகள் மீது மோதியதோடு அவர்களைப் பயமுறுத்தியும் அவர்கள் பிடித்துவரும் மீன்களில் சுவையானவற்றை பறித்தும் செல்கிறார்களாம். அப்படிக் கொடுக்காத பட்சத்தில் கள்ளக்கடத்தல் செய்கின்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பலவித இன்னல்களுக்குள்ளாக்கப்படுகிறார்களாம். உண்மையில் இவர்களது இன்னற்குட்படுபவர்கள் கள்ளக் கடத்தல்காரர்களல்லவென்றும் உண்மையான கடற்றொழிலாளர்களென்றும் கூறப்படுகிறது. இதனால் தாங்கள் மீன் உள்ள கடற்பகுதிகளுக்குச் சென்று மீன்பிடிக்க முடியாத நிலை ஏற்படுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

தொடர்ந்து மூன்று நாட்கள் ஊர்காவற்றுறையிலுள்ள கடற்படையினரின் படகுகள் மீன்பிடிப்படகுகளை மோதியுள்ளனவாம். ஒரு வள்ளம் மிகமோசமாக உடைந்து தண்ணீர் படகுள் ஏறிய பொழுதிலும் கூட அவர்களை கரைக்குக் கொண்டுவந்து சேர்க்க எவ்வித முயற்சியையும் கடற்படையினர் செய்யாதது மட்டுமல்ல, அவர்களைப் பயமுறுத்தியுள்ளனராம். இதுபற்றி புகார்செய்யப்பட்ட மறுநாள் இன்னொரு படகு வேறோர் மீன்பிடிப் படகுடன் மோதியுள்ளது.

இவ்வித நிகழ்ச்சிகள் தொடர்ந்தும் நடந்தால் மீன்பிடித்தொழில் குன்றிவிடும் என்றும் ஒரு மீன்பிடிப்படகின்விலை சுமார் 26 ஆயிரம் ரூபாவென்றும் மீன்பிடியாளர்கள் கூறுகின்றனர்.

## லாவோஸில் அந்நியர் தலையீடு: இலங்கை கண்டனம்

கோட்டை, சனி லாவோஸில் அமெரிக்கத் துருப்புகளின் உதவியோடு தென் வியட்னாம் துருப்புக்கள் நடத்தும் தாக்குதல்களைத் தொடர்ந்து அங்கு மிகவும் கடுமையான போர் நடப்பதையிட்டு இலங்கை அரசாங்கம் மிகுந்த கவலை தெரிவித்துள்ளது.

லாவோஸில் நடைபெறும் சம்பவங்கள் பற்றி இலங்கை அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டதாவது!

லாவோஸில் தென்வியட்னாமியருக்கு அமெரிக்க ஹெலிகாப்டர்கள் துணைபோனதன் மூலம் அப்பகுதியில் நெருக்கடியை ஏற்படுத்தத் தூண்டுதலாக அமைந்துள்ளது. கம்போடியாவைத் தொடர்ந்து லாவோஸுக்கு யுத்த நிலைமையை விரிவுபடுத்தியதன் மூலம் அப்பகுதி மக்களின் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது. இவ்விஷயத்தில் அப்பகுதிக்கு அண்மையிலுள்ள நாடுகள் மிகவும் கவனத்துடன் இருக்கவேண்டியுள்ளது அமெரிக்கர் லாவோஸ் போரில் ஈடுபட, தென் வியட்னாமிலிருந்து படிப்படியாக அமெரிக்கத் துருப்புக்களைவிலக்கிக்கொள்வதென்ற தீர்மானத்திற்கு முரணானது அதுமட்டுமல்ல, 1962ம் ஆண்டு லாவோஸ் பற்றிய நடுநிலைமைப் பிரகடனத்திற்கு முற்றிலும் புறம்பானதாகும் என்று அவ்வறிக்கை கூறுகிறது

மேலும் லாவோஸில் நடக்கும் நிகழ்ச்சிகள் இலங்கைக்கு மிகவும் வேதனையை அளிக்கிறது. இதுசம்பந்தப்பட்ட பிரதேசங்களிலிருந்து அந்நியத்துருப்புக்கள் வெளியேறவேண்டும் என்பதே இலங்கை அரசின் கொள்கையாகும், தொடர்ந்தும் அப்பகுதியில் இவ்விதமான துயரங்கள் நடைபெறாமல் இருக்கவேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

......

### டெஸ்ட் கிரிக்கெட்

## நியூ: 212-8

நியூஸிலாந்து, பெப் 27 நியூஸிலாந்துக்கும், இங்கிலாந்துக்குமிடையில் நடைபெறும் 1-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து தனது 2-வது இன்னிங்ஸில் இன்றைய ஆட்ட இறுதியில் 8 விக்கெட்டுகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது.

நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் 65 ஓட்டங்களையும், இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 231 ஓட்டங்களையும் பெற்றன.

## இந்தக்கானியை விமனப்படை கையேற்கிறது

கொழும்பு, சனி இலங்கை விமானப்படை தலைமைக் காரியாலயத்துக்கு அருகில் உள்ள "சரசன்ஸ்" விளையாட்டுக் கழக மைதானத்தை விமானப்படை மார்ச் மாதம் முதல் திகதி சுவீகரிக்கவிருக்கிறது.

விமானப் படையினர் தங்குவதற்கான கட்டிடங்களை இந்த விளையாட்டு மைதானத்தில் அரசாங்கம் அமைக்கவிருக்கிறது விமானப்படை சுவீகரிங்கவிருக்கும் இந்த நிலம் சரசன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்குச் சொந்தமானது. (பி.பி.ஏ)

## லொறி குடைசாய்ந்தது

பருத்தித்துறை, சனி பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த லொறியொன்று வதிரி வீதியிற் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ் வண்டியைத் தாண்டிச் செல்லும் போது தோட்டத்திற்குள் குடை சாய்ந்தது. லொறியில் இருந்த ஒரு பெண்ணும் குழந்தையும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வான் ஒன்றின் பின் சில்லு கழன்று விட்டதால் வான் திசைதிருப்ப முடியாது சில தூரம்வரை சென்று நின்றது. எவ்வித ஆபத்தும் ஒருவருக்கும் ஏற்படவில்லை.

## மக்கள் அரசாங்கத்துடன் யு. என். பி ஒத்துழைக்கும்?

கொழும்பு. சனி மக்கள் அரசாங்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைக்கவேண்டும் என்று திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட திட்டம் பற்றிய தீர்க்கமான முடிவு எதுவும் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்படாததால் அந்தப் பிரச்சினை நேற்றுடன் முடிவடைந்துவிடவில்லை என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் இந்த யோசனையை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் வாக்கெடுப்புக்கு விட்டிருந்தால் பெரும்பாலும் அந்தக் கோரிக்கை நிறவேற்றப்பட்டிருக்குமென்றும் திரு. ஜே. ஆர். அந்த யோசனையைத் தீர்மானமாகக் கொண்டு வராததினால் வாக்கெடுப்புக்கு விடமுடியவில்லையென்றும் ஐக்கிய தேசியக் கட்சிச் செயற்குழு உறுப்பினர் ஒருவர் நேற்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.

அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டுமென்ற தீர்மானம் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருந்தால் 48 செயற்குழு அங்கத்தவர்களில் பெரும்மான்மையினரின் ஆதரவு கிடைத்திருக்குமென்றும் அவர் சொன்னார். இத்திட்டம் மீது மேலும் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள் என்று திரு. ஜே. ஆரிடம் கேட்டபோது அவர் இதுசம்பந்தமாக எதையும் கூற மறுத்துவிட்டார். சி.பி ஏ

## 100 கோடி டாலருக்கு அமெரிக்க ஜெட் பெற சீனு பேச்சுவார்த்தை?

நியுயோர்க், பெப். 27 அமெரிக்காவிடமிருந்து 100 கோடி டாலர் பெறுமதியான அமெரிக்க ஜெட் விமானங்களைப் பெறுவதற்காக அமெரிக்காவுடன் சீனு பேச்சுவார்த்தை நடத்துவதாக அமெரிக்க ஒலிபரப்பு நிறுவனம் நியுயோர்க்கில் தெரிவித்தது.

## சட்டபூர்வமாக்க விருப்பமாம்

கொழும்பு. சனி குதிரைப் பந்தய புக்கிகளை சட்டபூர்வமாக்க விரும்புகின்றேன் ஆனால் இவ்விஷயம், அரசாங்கத்தினால் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும்.

நிதி அமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா நேற்று பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வேம்படி [illegible] 63 ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ந் திகதி வெளியிடப்பட்டது.